# கத்தோலிக்க திருமறை

## ஆசிரியர் வழிகாட்டி

## தரம் 11

(2016ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்படவுள்ளது)

சமயங்கள் மற்றும் விழுமியங்கள் கல்வித் துறை

தேசிய கல்வி நிறுவகம்

மஹரகம

ஸ்ரீ லங்கா

இணையத்தளம் : www.nie.lk

மின்னஞ்சல் : info@nie.lk

# கத்தோலிக்க திருமறை

## ஆசிரியர் வழிகாட்டி

## தரம் 11

சமயங்கள் மற்றும் விழுமியங்கள் கல்வித் துறை

தேசிய கல்வி நிறுவகம்

ஸ்ரீ லங்கா

இணையத்தளம் : www.nie.lk

மின்னஞ்சல் : info@nie.lk

கத்தோலிக்க திருமறை

தரம் 11

ஆசிரியர் வழிகாட்டி

முதற் பதிப்பு 2016

தேசிய கல்வி நிறுவகம்

ISBN

சமயங்கள் மற்றும் விழுமியங்கள் கல்வித் துறை

தேசிய கல்வி நிறுவகம்

ஸ்ரீ லங்கா

இணையத்தளம் : www.nie.lk

மின்னஞ்சல் : info@nie.lk

பதிப்பு

தேசிய கல்வி நிறுவகம்

## பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி

இலங்கையின் இடைநிலைக் கல்வியில் புதிய தேர்ச்சி மையப் பாடத்திட்டத்தின் முதற் கட்டம் 2007 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. எட்டு ஆண்டுகளுக்கொருமுறை மேற்கொள்ளப்படும் கலைத்திட்ட மறுசீரமைப்பின் மூலம் இது அறிமுகப்படுத்தப்பட்டது. தேசிய மட்டத் தேர்ச்சிகளை அபிவிருத்தி செய்யும் நோக்கின் அடிப்படையில் தேசிய கல்வி ஆணைக்குழுவின் விதப்புரைகளுக்கமைய அப்போது நடைமுறையிலிருந்த உள்ளடக்கம் சார்ந்த கல்வி முறைமை இதன் மூலம் மாற்றியமைக்கப்பட்டது.

தேர்ச்சி மையக் கலைத்திட்டத்தின் இரண்டாம் கட்ட மறுசீரமைப்பானது 2016ஆம் ஆண்டிலிருந்து தரம் 7, 11 ஆகிய வகுப்புக்களுக்கு அமுல்படுத்தப்படவுள்ளது. இந் நோக்கத்தை அடையும் பொருட்டுத் தேசிய கல்வி நிறுவகம் ஆய்வை அடிப்படையாகக் கொண்ட பேறுகளையும் ஆர்வலர்களுடைய பல்வேறு ஆலோசனைகளையும் பலதரப்பட்டவர் களிடமிருந்தும் பெற்றுக்கொண்டது. அவற்றின் அடிப்படையில் நியாயப்படுத்தப்பட்டதொரு செயன்முறையை அறிமுகப்படுத்தியதுடன் அதற்கமைவான பாடத்திட்டங்களையும் மேற்படி தரங்களுக்காக விருத்தி செய்துள்ளது.

இந்த நியாயப்படுத்தற் செயன்முறையிற் கலைத்திட்ட மறுசீரமைப்பின் போது நிலைக்குத்தான ஒருங்கிணைப்பு முறை பயன்படுத்தப்பட்டு, கீழிருந்து மேல்நோக்கிய அணுகுமுறையில் அனைத்து பாடங்களுக்குமான தேர்ச்சி மட்டங்கள் முறைமையாக விருத்தி செய்யப்பட்டுள்ளன. மேலும்,அடிப்படை விடயங்களிலிருந்து உயர் மட்டத்தை நோக்கிச் செல்லும் வகையில் அவை ஒழுங்குபடுத்தப்பட்டும் உள்ளன. பாட உள்ளடக்கத்திற் காணப்படும் கூறியது கூறல் மற்றும் பாட உள்ளடக்கச் சுமை என்பவற்றை இழிநிலைக்கு இட்டுச் செல்லவும் மாணவர் நேயமானதும் நடைமுறைக்கேற்றதுமான கலைத்திட்டமொன்றை உருவாக்கும் நோக்கிலும் கிடையான ஒருங்கிணைப்பானது பயன்படுத்தப்பட்டுள்ளது.

ஆசிரியர்களுக்குத் தேவையான வழிகாட்டல்களை வழங்கவும் பாடத்தைத் திட்டமிடவும் கற்பிக்கவும் செயற்பாடுகளை முன்னெடுக்கவும் அளவீடு மற்றும் மதிப்பீடுகளை மேற்கொள்ளவும் உதவுமுகமாக ஆசிரியர் வழிகாட்டியிற் புதிய வடிவமைப்பு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இவ் வழிகாட்டல்கள் ஆசிரியர்கள் வகுப்பறையில் மென்மேலும் உற்பத்தித் திறனுள்ளதும் விளைதிறன் மிக்கதுமான வகையிற் துலங்குவதற்கு உதவும்.

புதிய ஆசிரியர் வழிகாட்டிகள் மாணவர்களது தேர்ச்சிகளை விருத்தி செய்யும் வகையிற் தர உள்ளீடுகளையும் மேலதிக செயற்பாடுகளையும் தெரிவு செய்வதில் ஆசிரியர்களுக்குச் சுதந்திரத்தை வழங்கியுள்ளது. இப்புதிய ஆசிரியர் வழிகாட்டிகள் பாட உள்ளடக்கச் சுமையை விடுத்து, விதந்துரைக்கப்பட்ட பாடநூல்களின் மூலம் பாட உள்ளடக்கத்தைப் பூரணப் படுத்தியுள்ளது. ஆகவே, ஆசிரியர்கள் புதிய ஆசிரியர் வழிகாட்டிகளைப் பயன்படுத்தும் அதேவேளை கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தினாற் தயாரிக்கப்பட்ட பாடநூல்களையும் பொருத்தமான வகையிற் பயன்படுத்துதல் வேண்டும்.

ஆசிரியர் மையக் கல்வி முறைமையிலிருந்து மாணவர் மையக் கல்வி முறைமைக்குத் தளமாற்றம் செய்வதும் வேலையுலகிற்கு ஏற்ற வகையிற் பொருத்தமான மனித வளங்களை விருத்தி செய்வதும் தேவையான தேர்ச்சிகளையும் திறன்களையும் பாடசாலையிலிருந்து வெளியேறும் மாணவர்கள் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான செயற்பாடு சார்ந்த கல்வி முறைமையை விருத்தி செய்வதும் மேற்படி நியாயப்படுத்தப்பட்ட பாடத்திட்டம் மற்றும் ஆசிரியர் வழிகாட்டியின் புதிய வடிவமைப்பு என்பவற்றின் அடிப்படை நோக்கங்களாகும்.

புதிய ஆசிரியர் வழிகாட்டியை உருவாக்குவதிற் பங்களிப்புச் செய்த தேசிய கல்வி நிறுவகத்தின் கல்விசார் அலுவல்கள் சபை மற்றும் பேரவை உறுப்பினர்களுக்கும் அனைத்து வளவாளர் களுக்கும் எனது நன்றிகள் உரித்தாகின்றன.

பணிப்பாளர் நாயகம்
தேசிய கல்வி நிறுவகம்

## பிரதி பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி

கற்றல் என்பது பரந்து விரிந்து செல்வதொன்றாகும். அது வாழ்க்கையை மேம்படுத்தவும் எளிமைப்படுத்தவும் வல்லது. மனிதன் கற்கும் ஆற்றலில் உச்ச நிலையில் உள்ளான். மனித, சமூக அபிவிருத்தியை மையமாகக் கொண்ட ஒரு நாடும் அதன் சமூகமும் அறிவாற்றலினால் இனங்கண்ட, நியமமற்றவற்றைக் களைவதற்கும். நல்லவற்றைப் பண்படுத்திப் புத்துலகைப் படைப்பதற்கான கருவியாய் அமைவது கல்வியாகும்.

கற்றலுக்காகப் பெறுமதிமிக்கவை எவையோ அவையும், கற்றல் முறையியல்களும் வசதிகளும் கல்வியைச் சூழ உருவாதல் வேண்டும். கலைத்திட்டம், பாடத்திட்டம், வழிகாட்டிகள், வசதி செய்வோர் போன்றவையெல்லாம் இவ்வகையிலேயே கல்வித்துறையிற் சேர்ந்து கொள்கின்றன.

இலங்கை, நவீன செல்நெறிகளையும் பண்டைய அருஞ்செல்வங்களையும் கலக்கச் செய்து தமது கல்விக்கோலத்தை உருவாக்கிக்கொண்டுள்ளது. சமகாலத் தேவைகளுக்கமைய மறுசீரமைப்புகளினூடாக எட்டு ஆண்டுகளுக்கொருதடவை நடைமுறைப்படுத்தப்படும் கலைத்திட்டத்துக்குரிய ஒரு கற்றல் வளமாக இவ்வாசிரியர் வழிகாட்டிகள் தயாரிக்கப்படுகின்றன.

பாடக் குறிக்கோள்களின் ஒத்ததன்மையை தேசிய மட்டத்தில் பேணுவது அவசியமாகும். எனினும், ஆசிரியர் வழிகாட்டியிற் தரப்பட்டுள்ள கற்றல் முறையியல்கள் சற்றேனும் பிசகாது அச்சொட்டாகப் பயன்படுத்துவதற்குரிவையன்று. பாடத்திட்டத்தின் தேர்ச்சிகள், தேர்ச்சி மட்டங்களை அடைவதற்காகப் பாடவிடயங்களின் மூலம் கற்றற் பேறுகளை அண்மிப்பதற்காகக் கற்றல் முறையியல்களை ஆக்கபூர்வமானதாக மாற்றியமைத்துக் கொள்வதற்கான சுதந்திரம் வசதி செய்து கொடுப்போருக்கு உண்டு என்பதில் ஐயமில்லை. மாணவரது அடைவுச் சதவீதத்தை உயரிய மட்டத்திற்கு இட்டுச் செல்ல உதவும் மற்றும் அதற்கான வசதிகளைச் செய்து கொடுக்கும் ஆசிரியரது வகிபாகத்திற்கு உந்துதலளிப்பதற்காகத் தயாரிக்கப்பட்டுள்ள ஆசிரியர் வழிகாட்டியை ஆசிரியர்கள் மட்டுமன்றி மாணவரும் பெற்றோரும் கூட பயன்படுத்தலாம். குறித்த பாடத்தின் பாடநூலுக்குத் துணையாக அமையும் ஒரு சாதனமான இவ்வாசிரியர் வழிகாட்டி, மற்றுமொரு பாடநூல் அன்று என்பதை அறிந்து பாடநூல், ஆசிரியர் வழிகாட்டி ஆகிய இரண்டையும் ஆசிரியர்கள் பயன்படுத்த வேண்டும்.

அந்தந்தப் பாடத்தின் அடைவு தொடர்பில், தேசிய நிலைப் பரீட்சகர்களால் எதிர்பார்க்கப்பெறும் அடைவுகளை, மாணவர்கள் அடைந்துள்ளனரா என்பது பற்றிப் பாடநிறைவில் வகுப்பறையில் வசதி செய்து கொடுப்பவர்களால் மதிப்பிடப் பெறுதல் வேண்டும். களிப்பூட்டத்தக்க செழுமையான பண்பாட்டைக் கட்டியெழுப்புவதற்கான ஒரு கருவியாக இவ்வாசிரியர் வழிகாட்டி அமைய வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

பீடாதிபதி, பிரதிப் பணிப்பாளர் நாயகம்

மொழிகள், மானுடவியல், சமூக விஞ்ஞான பீடம்

தேசிய கல்வி நிறுவகம்.

## கலைத்திட்டக் குழு

**ஆலோசனை** : கல்விசார் அலுவல்கள் சபை
தேசிய கல்வி நிறுவகம்

**இணைப்பாளர்** : அருட்பணி. கால்டன் டி சில்வா
விரிவுரையாளர் - தேசிய கல்வி நிறுவகம்

அருட்பணி. எஸ். அந்திரியாஸ் ஏ. பர்ணாந்து அ.ம.தி.
(உதவி விரிவுரையாளர் - தேசிய கல்வி நிறுவகம்)

**எழுத்தாளர் குழு** :

- அருட்பணி. ஜுட் தஸநாயக்க. முதுமாணி
  விரிவுரையாளர்,
  கல்வியியற் கல்லூரி, பிங்கிரியா.
- திரு. எஸ். ஜீ. கே. டி. எல். சீ. பிரசாத். முதுமாணி
  ஆசிரிய ஆலோசகர், கல்வி வலயம், ஹோமாகம.
- செல்வி துஷ்மந்தி டி சில்வா
  ஆசிரிய ஆலோசகர், கல்வி வலயம்,
  மிநுவன்கொடை.
- செல்வி. டி. ஐ. ஜோசப்
  ஆசிரிய ஆலோசகர், கல்வி வலயம், கொழும்பு.
- திரு. ரீ. ஐ. இரங்கநாயகம். கலைமாணி
  ஆசிரியர், புனித அந்தோனியார் மகளீர் மகா
  வித்தியாலயம், கொழும்பு 03.
- திருமதி. டப்ளியு. கே. எம். ஐ. எஸ். கே. பர்னாந்து
  ஓய்வு பெற்ற ஆசிரிய ஆலோசகர்.
- திருமதி. தி. ஜே. போல் அன்ரனி. கலைமாணி
  ஓய்வு பெற்ற அதிபர்.

## கத்தோலிக்க ஆலோசகர் குழு

- அதிமேதகு மெக்ஸ்வெல் சில்வா ஆண்டகை
  தலைவர்,
  கல்வி, மறைக்கல்வி, திருவிவிலிய கல்வி பற்றிய ஆயர்களின் ஆணைக்குழு

- அதிமேதகு ஜோசப் பொன்னையா ஆண்டகை
  உபதலைவர்,
  கல்வி, மறைக்கல்வி, திருவிவிலிய கல்வி பற்றிய ஆயர்களின் ஆணைக்குழு

- அதிவண. ஐவன் பெரேரா
  கத்தோலிக்க பாடசாலை பற்றிய தேசிய பணிப்பாளர்

- அருட்பணி. பியல் ஜானக பெரேரா
  திருவிவிலிய, மறைக்கல்வி பற்றிய தேசிய பணிப்பாளர்

- கலாநிதி அருட்பணி. ஹென்றி சில்வா
  விரிவுரையாளர், களனி பல்கலைக்கழகம்

- கலாநிதி. அருட்பணி. ஞானமுத்து ஹெக்ரர் பிலேந்திரன்
  தலைவர்,
  மேற்கத்தேய கலாசாரம் மற்றும் கிறிஸ்தவ, இஸ்லாம் கலாசார பீடம்,
  யாழ். பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்.

- அருட்பணி. கிறெகறி எல். பர்னாந்து O.S.B.
  உதவி பணிப்பாளர்,
  சமய பிரிவு – கல்வி அமைச்சு.

**கணினி அமைப்பு** - **செல்வி.** தயானா மோசெஸ்

அலுவலக உதவி - திரு. டயஸ் அமரசிங்க
திருமதி. எஸ். பிரியதர்சினி

# உள்ளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| பணிப்பாளர் நாயகத்தின் செய்தி | iii |
| பிரதி பணிப்பாளர் நாயகத்தின் செய்தி | iv |
| கலைத்திட்டக் குழு | v |
| அறிமுகம் | viii |
| ஆசிரியர் வழிகாட்டியைப் பயன்படுத்துவதற்கான அறிவுறுத்தல்கள் | ix |
| தேசிய குறிக்கோள், அடிப்படைத் தேர்ச்சிகள் | x |
| பாடத்திட்டத்தின் நோக்கங்கள் | xii |
| பாடத்திட்டம் | xiii |
| கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டிற்கான வழிகாட்டல் | 1-63 |

## அறிமுகம்

சமயம் என்பது வாழ்க்கை. எனவே சமயத்தை வாழ்க்கையிலிருந்து பிரிக்கமுடியாது. அனைத்து சமயங்களினதும் நோக்கம் ஒழுக்க விழுமியங்கள் நிறைந்த ஒரு சமூகத்தை உருவாக்குவதே ஆகும். இக் குறிக்கோளை அடிப்படையாகக் கொண்டே இக் கலைத் திட்டம் திருத்தியமைக்கப் பட்டுள்ளது. இதற்கேற்ப இப் புதிய கலைத் திட்டத்தில் உள்ள தேர்ச்சிகளை மாணவரிடையே உருவாக்குவதே இதன் அடிப்படை நோக்கமாக அமைந்துள்ளது.

தேர்ச்சி என்பது அறிவு, மனப்பாங்கு, திறன், ஆளிடைத்திறன் என்பவற்றை ஒன்றிணைத்த ஒரு வாழ்க்கை முறையாகும்.

கிறிஸ்தவராகிய நாம் ஏற்றுக்கொள்ளும் அன்பை மையமாகக் கொண்ட இயேசுவின் படிப்பினையையே, கல்வித்தத்துவவியலாளர்கள் ஆளிடைத்திறன் என விளக்குகின்றார்கள். எனவே உன்னத ஆசிரியரான நம் ஆண்டவர் இயேசுக் கிறிஸ்துவின் படிப்பினைகளை நன்கு அறிந்து, கிறிஸ்தவ மனப்பாங்கை விருத்தியடையச் செய்து திறமை மிக்க அன்பு நிறைந்த ஒரு வாழ்வை கட்டியெழுப்புவதே இப் புதிய கலைத்திட்டத்தின் அடிப்படை அம்சமாகும்.

கிறிஸ்தவ படிப்பினைகள் திருவிவிலியத்தை அடிப்படையாகக் கொண்டே அமைந்துள்ளன. ஏனெனில் கிறிஸ்தவ நம்பிக்கை, எதிர் நோக்கு, அன்பு என்பன திருவிவிலியத்தையே மையமாகக் கொண்டுள்ளது. ஆகையால் இக் கத்தோலிக்க கலைத்திட்டமும் திருவிவிலியத்துடனே ஆரம்பிக்கின்றது. மேலும் திருத்தந்தை தூய இரண்டாம் யோண் பவுலினால் குறிப்பிட்ட விசேட குழுவினரால் வடிவமைக்கப்பட்ட “ கத்தோலிக்க திருமறைக்கல்வி” (Catechism of the Catholic Church) எனும் நூலின் தலைப்பிற்கேற்ப ஏனைய தலைப்புகள் நான்கும் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன. அதற்கேற்ப பின்வரும் ஐந்து தலைப்புகள் இக் கலைத்திட்டத்தில் உள்ளடங்கி உள்ளது.

1. திருவிவிலியம்
2. விசுவாசம்
3. அருளடையாளம்
4. பத்துக்கட்டளை
5. செபவாழ்வு

மேற்கூறப்பட்ட தலைப்புகள் ஐந்துக்கேற்ப அமைக்கப்பட்ட ஐந்து தேர்ச்சிகளுடாக, 6-11 வகுப்பு வரையிலான மாணவர் உச்ச பயன் அடைய வேண்டுமென எதிர்ப்பார்க்கப் படுகின்றது. இதன் வழியாக திறமைமிக்க, முதிர்ச்சியடைந்த, செயல்திறன்மிக்க ஒரு கத்தோலிக்க பிரஜையை உருவாக்குவதே நோக்கமாகக் கருதப்படுகின்றது.

அதற்காக 6-9 வகுப்புகளில் அடிப்படை வாழ்க்கை முறையையும், 10-11 வகுப்புகளில் ஒரு முதிர்ச்சி பெற்ற கத்தோலிக்க மாணவனாக செயல்படவும் தேவையான தேர்ச்சிகளை உருவாக்குவது இதன் எதிர்ப்பார்ப்பாகும்.

ஏனெனில் உயர்தர வகுப்புகளில் மிகக் குறைந்தளவு மாணவர்களே கிறிஸ்தவம், கிறிஸ்தவ நாகரிகம் ஆகிய பாடங்களைத் தெரிவு செய்கின்றார்கள். எனவே பெரும்பாலான மாணவர்களினது கிறிஸ்தவ கல்வி அறிவு க.பொ.த. (சா/த) கலைத்திட்டத்துடன் வரையறுக்கப்படுகின்றது.

இங்கு குறிப்பிடப்பட்டுள்ள செயற்திட்டங்களை மேலும் விருத்தி செய்து, உரிய தேர்ச்சிகளை மாணவர்களிடம் உருவாக்க மாணவர் மைய கல்விச் செயற்பாடுகளை அமைக்க வளவாளராகச் செயற்படுவதே ஆசிரியர்களது கடமையாகும்.

கிறிஸ்தவ விழுமியங்கள் கத்தோலிக்க ஆசிரியரது வாழ்வில் பிரதிபலிக்கப்படுவதை மாணவர்கள் கண்டுணர வேண்டும். எனவே சமயக் கல்வியைக் கற்பிக்கும் ஆசிரியர்கள் சிறந்த ஒழுக்காற்றல் கொண்டவர்களாக் திகழ்வது சாலச் சிறந்தது.

## ஆசிரியர் வழிகாட்டி பாவிப்பதற்கான அறிவுரைகள்

கத்தோலிக்க நெறிக்கு ஏற்ப வளமான வாழ்வுக்கு அவசியமான தேர்ச்சிகளின் அடிப்படையில் பாடசாலைக் கல்வியுடன் தேர்ச்சிகளை விருத்தி செய்வதற்கு இடமளித்து ஆசிரிய வழிகாட்டி தயாரிக்கப்பட்டுள்ளது.

அறிவு மையம் சார்ந்த பரீட்சை முறைகளின் கீழ் சிறந்த பெறுபேறுகளையும் அறிவையும் ஊட்டுகின்ற கல்வி முறையானது சிறந்தது அல்ல என்பதை நாம் கவனத்திற் கொள்ள வேண்டும். கல்வியின் மூலம் உள்ளமும் கைகளும் ஊட்டம் பெற வேண்டும். இந்த இலக்கை நிறைவேற்றிக்கொள்ளும் முயற்சியில் இவ் ஆசிரியர் வழிகாட்டி நூலானது தயாரிக்கப்பட்டுள்ளது.

ஆசிரியர் வழிகாட்டியானது பாட நூலுக்கும் பாடத்திட்டத்திற்கும் ஏற்ப எழுதப்பட்டுள்ளது. எனவே கற்றல்- கற்பித்தல் செயற்பாடுகளை இந்த வரையறைக்குள் ஒழுங்கமைத்துக் கொள்வது எமது கடமையாகும்.

- பாட பிரவேசமானது மிக முக்கியமானதாகையால் மாணவரின் ஆர்வத்தை தூண்டும் வகையில் பாடத்தை ஆரம்பியுங்கள்.
- பாட பிரவேசத்திற்கும் பாட விருத்திக்கும் அவசியமான தர உள்ளீடுகளை பயன்படுத்துங்கள்.
- மாணவரை சிறு குழுக்களாக பிரித்து குழு செயற்பாடுகளில் ஈடுபடுத்துங்கள்.
- கற்றல்- கற்பித்தல் செயற்பாடுகளுக்கு உசிதமான இடத்தினை தெரிவு செய்யுங்கள்.
- கற்றல் பேறுகளில் மாணவரின் வாழ்வை வளப்படுத்தும் வகையில் செயற்படுங்கள்.
- மாணவரின் விசுவாசத்தை விருத்திசெய்வதற்கு உறுதுணையாக இருங்கள்.

இங்கு உள்ளடக்கப்பட்டுள்ள கற்றல்-கற்பித்தல் செயற்பாடுகள் கட்டாயமானதல்ல. அதற்கு வேறு முறைகளையும் பொருத்தமான வகையில் பாவிக்கலாம். இருப்பினும் தேர்ச்சி, தேர்ச்சி மட்டங்கள் முக்கியமானதாகும். கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளில் கிறிஸ்தவ மத விழுமியங்களை வளர்ப்பதிலும் பிரயோகிப்பதிலும் அதிக கவனத்தை செலுத்துங்கள்.

பாட ஆரம்பம் முதல் இறுதிவரை கணிப்பீடு செய்வதுடன் ஆற்றல், ஆற்றலற்ற நிலைக்கேற்ப பின்னூட்டல் மற்றும் முன்னூட்டலை பெற்றுக்கொடுக்க வேண்டும். நேர அட்டவணை தயாரிக்கும் போது இரண்டு பாடவேளைகளும் அடுத்தடுத்து அமையாது பாடத்தை நெறிப்படுத்துவது உங்களுடைய பொறுப்பாகும். பாடத்திற்கு எதிர்ப்பார்க்கப்படும் மதிப்பீட்டு கணிப்பீட்டு நியதிகளுக்கு ஏற்றவாறு பாடத்தை தயார்செய்யுங்கள். மதிப்பீட்டின்போது புள்ளி வழங்கும் முறைகளை மாணவருக்கு முன்னரே அறிவியுங்கள். நீங்கள் மாணவருக்கு வழங்கும் பயிற்சிகளை பிழையின்றி பரிசீலனை செய்துகொள்ளுங்கள்.

பாடங்களின் இறுதியில் குறிப்பிடப்பட்டுள்ள வீட்டுச்சூழல் என்ற பகுதியானது பெற்றோர் முதியோரின் பங்களிப்புடன் நிறைவேற்றப்படுதல் உகந்தது. அதற்கான அறிவுரைகளை அதிபர், பாட ஆசிரியர் மூலமாக பெற்றோர்களுக்கும் முதியோருக்கும் வழங்குதல் வேண்டும்.

**சமயத்துறை -கத்தோலிக்க திருமறை**

**தேசிய கல்வி நிறுவகம்.**

## தேசிய குறிக்கோள்

தேசிய கல்வி முறைமையானது தனிநபர்க்கும் சமூகத்திற்கும் பொருத்தமான பெரும்பாலான தேசிய இலக்குகளை அடைவதற்குத் தனிநபர்களுக்கும் குழுவினருக்கும் உதவி செய்தல் வேண்டும்.

கடந்த காலங்களில் இலங்கையின் பெரும்பாலானகல்வி அறிக்கைகளும் ஆவணங்களும் தனிநபர் தேவைகளையும் தேசிய தேவைகளையும் நிறைவு செய்வதற்காக இலக்குகளை நிர்ணயித்துள்ளன. சமகால கல்வி அமைப்புகளிலும் செயன்முறைகளிலும் வெளிப்படையாகக் காணப்படும் பலவீனங்கள் காரணமாக நிலைபேறுடைய மனித விருத்தியின் எண்ணக்கரு திட்ட வரம்பினுள் கல்வியினூடாக அடையக் கூடிய பின்வரும் இலக்குத் தொகுதியினை தேசிய கல்வி ஆணைக்குழு இனங்கண்டுள்ளது.

1. மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் எனும் எண்ணகருவுக்குள் தேசியப்பிணைப்பு, தேசிய முழுமை, தேசிய ஒற்றுமை, நல்லிணக்கம், சமாதானம் என்பவற்றை மேம்படுத்தல் மூலம் இலங்கைப் பன்மைச் சமூகத்தின் கலாசார வேறுபாட்டினை அங்கீகரித்தல் மூலமும் தேசத்தைக் கட்டி எழுப்புதலும் இலங்கையர் எனும் அடையாளத்தை ஏற்படுத்தலும்.
2. மாற்றமுறும் உலகத்தின் சவால்களுக்குத் தக்கவாறு முகங்கொடுத்தலோடு தேசிய பாரம்பரியத்தின் அதி சிறந்த அம்சங்களை அங்கீகரித்தலும் பேணுதலும்.
3. மனித உரிமைகளுக்கு மதிப்பளித்தல், கடமைகள், கட்டுப்பாடுகள் பற்றிய விழிப்புணர்வு, ஒருவர் மீது ஒருவர் கொண்டுள்ள ஆழ்ந்த, இடையறாத அக்கறையுணர்வு என்பவற்றை மேம்படுத்தும் சமூக நீதியும் ஜனநாயக வாழ்க்கைமுறை நியமங்களும் உள்ளடங்கிய சுற்றாடலை உருவாக்குதலும் ஆதரித்தலும்.
4. ஒருவரது உள, உடல் நலனையும் மனித விழுமியங்களுக்கு மதிப்பளிப்பதை அடிப்படையாகக் கொண்ட நிலைபேறுடைய வாழ்க்கைக் கோலத்தையும் மேம்படுத்தல்
5. நன்கு ஒன்றிணைக்கப்பட்ட சமநிலை ஆளுமைக்குரிய ஆக்க சிந்தனை, தற்றுணிபு, ஆய்ந்து சிந்தித்தல், பொறுப்பு, வகைகூறல் மற்றும் உடன்பாடான அம்சங்களை விருத்தி செய்தல்.
6. தனிநபரதும் தேசத்தினதும் வாழ்க்கைத் தரத்தைப் போிக்கக் கூடியதும் இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிக்கக் கூடியதுமான ஆக்கப் பணிகளுக்கான கல்வியூட்டுவதன் மூலம் மனிதவள அபிவிருத்தி.
7. தனிநபர்களின் மாற்றத்திற்கு ஏற்ப இணங்கி வாழவும், மாற்றத்தை முகாமை செய்யவும் தயார்ப்படுத்தவும் விரைவாக மாறிவரும் உலகில் சிக்கலானதும், எதிர்பாராததுமான நிலைமைகளைச் சமாளிக்கும் தகைமையை விருத்தி செய்தல்.
8. நீதி, சமத்துவம், பரஸ்பர மரியாதை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு சர்வதேச சமுதாயத்தில் கௌரவமானதோர் இடத்தைப் பெறுவதற்குப் பங்களிக்கக் கூடிய மனப்பாங்குகளையும் திறன்களையும் வளர்த்தல்.

## அடிப்படைத் தேர்ச்சிகள்

கல்வியினூடாக விருத்தி செய்யப்படும் பின்வரும் அடிப்படைத் தேர்ச்சிகள் மேற்குறித்த தேசிய இலக்குகளை அடைவதற்கு வழிவகுக்கும்.

### 1. தொடர்பாடல் தேர்ச்சிகள்

தொடர்பாடல் பற்றிய தேர்ச்சிகள் நான்கு துணைத் தொகுதிகளை அடிப்படையாகக் கொண்டவை. எழுத்தறிவு, எண்ணறிவு, சித்திர அறிவு, தகவல் தொழினுட்பத் தகைமை.

| | |
|---|---|
| எழுத்தறிவு: | கவனமாகச் செவிமடுத்தல், தெளிவாகப் பேசுதல், கருத்தறிய வாசித்தல், சரியாகவும், செம்மையாகவும் எழுதுதல், பயன்தருவகையான கருத்துப் பரிமாற்றம் |
| எண்ணறிவு: | பொருள், இடம், காலம் என்பவற்றுக்கு எண்களைப் பயன்படுத்தல், எண்ணுதல், கணித்தல், ஒழுங்கு முறையாக அளத்தல் |
| சித்திர அறிவு: | கோடு, உருவம் என்பவற்றின் கருமத்தை அறிதல், விபரங்கள், அறிவுறுத்தல்கள், எண்ணங்கள் ஆகியவற்றை கோடு, உருவம், வர்ணம் என்பவற்றால் வெளிப்படுத்தலும் பதிவு செய்தலும் |
| தகவல் தொழினுட்பத் தகைமை: | கணினி அறிவு, கற்றலில், தொழில் சுற்றாடலில், சொந்த வாழ்வில் தகவல் தொடர்பாடல் தொழினுட்பங்களைப் (ICT) பயன்படுத்தல். |

## 2. ஆளுமை விருத்தி தொடர்பான தேர்ச்சிகள்

- ஆக்கம், விரிந்த சிந்தனை, தற்றுணிபு, தீர்மானம் எடுத்தல், பிரச்சினை விடுவித்தல், நுணுக்கமான மற்றும் பகுப்பாய்வுச் சிந்தனை, அணியினராகப் பணி செய்தல், தனியாள் இடைவினைத் தொடர்புகள், கண்டு பிடித்தலும் கண்டறிதலும் முதலான திறமைகள்.
- நேர்மை, சகிப்புத்தன்மை, மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் ஆகிய விழுமியங்கள்
- மன எழுச்சிகள், நுண்ணறிவு

## 3. சூழல் தொடர்பான தேர்ச்சிகள்

இத்தேர்ச்சிகள் சூழலோடு தொடர்புறுகின்றன. சமூகம், உயிரியல், பௌதிகம்

சமூகச் சூழல்: தேசிய பாரம்பரியம் பற்றிய விழிப்புணர்வு, பன்மைச் சமூகத்தின் அங்கத்தவர்கள் என்ற வகையில் தொடர்புறும் நுண்ணுணர்வுத் திறன்களும், பகிர்ந்தளிக்கப்படும் நீதி, சமூகத் தொடர்புகள், தனிநபர் நடத்தைகள், பொதுவானதும் சட்டபூர்வமானதுமான சம்பிரதாயங்கள், உரிமைகள், பொறுப்புக்கள், கடமைகள், கடப்பாடுகள் என்பவற்றில் அக்கறை.

உயிரியல் சூழல்: வாழும் உலகு, மக்கள், உயிரியல், சூழல் தொகுதி - மரங்கள், காடுகள், கடல், நீர், வளி, உயிரின தாவரம், விலங்கு, மனித வாழ்வு

பௌதிகச் சூழல்: இடம், சக்தி, எரிபொருள், சடப்பொருள், பொருள்கள் பற்றியும் அவை மனித வாழ்க்கை, உணவு, உடை, உறையுள், சுகாதாரம், சௌகரியம், சுவாசம், நித்திரை, இளைப்பாறுதல், ஓய்வு, கழிவுகள், உயிரின கழிவுப் பொருட்கள் ஆகியவற்றுடன் கொண்டுள்ள தொடர்பு பற்றிய விழிப்பணர்வும், நுண்ணுணர்வுத் திறன்களும் கற்றலுக்கும் வேலை செய்வதற்கும், வாழ்வதற்கும் கருவிகளையும் தொழினுட்பங்களையும் பயன்படுத்தும் திறன்களும் இங்கு உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 4. வேலை உலகத்திற்கு தயார் செய்தல் தொடர்பான தேர்ச்சிகள்

அவர்களது சக்தியை உச்ச நிலைக்குக் கொண்டு வருவதற்கும் அவர்களது ஆற்றலைப் போ'ிப்பதற்கும் வேண்டிய தொழில்சார் திறன்கள்.

பொருளாதார விருத்திக்குப் பங்களித்தல்

அவர்களது தொழில் விருப்புகளையும் உளச்சார்புகளையும் கண்டறிதல்

அவர்களது ஆற்றல்களுக்குப் பொருத்தமான வேலையைத் தெரிவு செய்தல்

பயனளிக்கக் கூடியதும் நிலைபேறுடையதுமான ஜீவனோபாயத்தில் ஈடுபடல்

## 5. சமயமும் ஒழுகலாறும் தொடர்பான தேர்ச்சிகள்

அன்றாட வாழ்க்கையில் மிகப் பொருத்தமானவற்றைத் தெரிவு செய்யவும், நாளாந்த வாழ்க்கையில் ஒழுக்கநெறி, அறநெறி, சமயநெறி தொடர்பான நடத்தைகளைப் பொருத்தமுற மேற்கொள்ளவும் விழுமியங்களைத் தன்மயமாக்கிக் கொள்ளலும் உள்வாங்கலும்

## 6. ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தல், விளையாட்டு பற்றிய தேர்ச்சிகள்

அழகியற் கலைகள், இலக்கியம், விளையாட்டு, மெய்வல்லுநர் போட்டிகள், ஓய்வு நேரப் பொழுதுபோக்குகள் மற்றும் வாழ்வின் ஆக்கபூர்வச் செயற்பாடுகள் மூலம் வெளிப்படுத்தப்படும் இன்ப நுகர்ச்சி, மகிழ்ச்சி, மனவெழுச்சிகள் இவைபோன்ற மனித அனுபவங்கள்

## 7. "கற்றலுக்குக் கற்றல்" தொடர்பான தேர்ச்சிகள்

விரைவாக மாறுகின்ற, சிக்கலான ஒருவரில் ஒருவர் தங்கி நிற்கின்ற உலகொன்றில் ஒருவர் சுயாதீனமாகக் கற்பதற்கான வலிமையளித்தலும் மாற்றியமைக்கும் செயன்முறை ஊடாக மாற்றத்திற்கேற்ப இயங்கவும் அதனை **முகாமை செய்யவும் வேண்டிய உணர்வையும் வெற்றியையும் பெறச் செய்தல்.**

மேற்குறிப்பிட்ட தேசிய கல்விக் குறிக்கோள்களும், அடிப்படைத் தேர்ச்சிகளும் இலங்கையின் கல்வி தொடர்பாக தேசிய கொள்கைகள், மற்றும் பிரேரணைகளை உள்ளடங்கிய தேசிய கல்வி ஆணைக்குழுவின் 2003 ஆம் ஆண்டு மார்கழி மாத அறிக்கையிலிருந்து பெறப்பட்டதாகும்.

## விடயக் குறிக்கோள்

1. தமது வாழ்வை உருவாக்க திருவிவிலியத்தை ஆதாரமாகக் கொள்வர்.
2. படைப்பிலே மிக உன்னத படைப்பான மனிதனை படைத்தவரை அறிந்துக் கொள்வர்.
3. கிறிஸ்துவினுடைய தூதுப் பணியையும் அவருடைய அனுபவங்களையும் ஏற்றுக் கொண்டு முழுமையான கிறிஸ்தவராக வாழ்வர்.
4. இறைவார்த்தை, அருளடையாளங்கள், பொதுவழிபாடுகள் வழியாக ஊட்டம் பெற்று கிறிஸ்தவ வாழ்வுக்கு சான்றுபகர்வர்.
5. மறையைக் கற்றலும் வாழ்தலும் ஒரே செயன்முறை என்பதை விளங்கிக் கொள்வர்.
6. இறைகட்டளைகளையும், மலைப்பொழிவின் படிப்பினைகளையும் அடிப்படையாகக் கொண்டு கிறிஸ்தவ விழுமியங்களை தமது வாழ்வில் வாழக் கற்றுக் கொள்வர்.
7. செபத்தின் வல்லமையால் ஊட்டப்பெற்று இறை வரப்பிரசாதங்களை அனுபவிப்பர்.
8. தமது சமூகத்தில் பல்வேறு செயற்பாடுகளால் கிறிஸ்துவின் அளவு கடந்த அன்பை பரப்புவர்.
9. தம்மைச் சுற்றியுள்ள இயற்கைச் சூழலானது இறைவனால் வழங்கப்பட்ட கொடை என்பதை உணர்ந்து, அதனை பாதுகாத்து, விருத்தி செய்வதற்கான ஆற்றலையும் அறிவையும் பெறுவர்.
10. ஒழுக்க விழுமியங்களையும், மனிதமாண்பையும் பேணிக்காத்து கிறிஸ்துவுக்குரிய பண்புகளோடு உயிருள்ள ஒரு சமூகத்தை உருவாக்கும் பணியில் ஈடுபடுவர்.
11. கிறிஸ்தவ விசுவாசத்தைப் பாதுகாப்பதோடு, ஏனைய மதங்களையும் மதித்து வாழப் பழகுவர்.
12. இலங்கைப் பிரஜை என்ற வகையில் தமது நாட்டின் மீது பற்றையும், மதிப்பையும் வளர்த்துக்கொள்வர்.

## விடயத்திற்குரிய தேர்ச்சிகள்

1. திருவிவிலியம் தொடர்பான முழுமையான விளக்கத்தைப் பெற்று அன்றாட வாழ்க்கையில் பயனுள்ள முறையில் பயன்படுத்துவர்.
2. இறைவெளிப்பாட்டை தமது வாழ்வில் செயற்படுத்தும் முகமாக விசுவாச வாழ்வு வாழ்வர்.
3. அருளடையாளங்கள் வழியாக கிறிஸ்துவுடன் ஒன்றித்து முழுமையான கிறிஸ்தவ வாழ்வுக்கு சான்றுபகர்வர்.
4. இறைவனின் கட்டளைகளைக் கடைப்பிடித்து அன்பு வாழ்வு வாழ்வர்.
5. செபத்தின் மூலம் ஊட்டம் பெற்று இறைவனுடனும், மனிதனுடனும் ஆழமான உறவை வளர்த்துக் கொள்வர்.

## பாடத்திட்டம்

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளை |
|---|---|---|---|---|
| 1 திரு விவிலியம் தொடர்பான விளக்கத்தைப் பெற்று அன்றாட வாழ்க்கையில் பலன்பெறுவார். | 11.1.1 இறையியல் சார்ந்த மரபுகள் பற்றிய அறிவினைப் பயன்படுத்தி ஐந்நூலைக் கற்றுக்கொள்வார். | **1. ஐந்நூல்**<br>• ஐந்நூலின் வேறு பெயர்கள்,<br>• ஐந்நூலில் உள்ள நூல்கள், மரபுகள்<br>• J.E.D.P ஆகிய மரபுகள் - சிறு சுருக்கமான எளிமையான அறிமுகம்<br>• ஐந்நூலின் முக்கியத்துவம். | • ஐந்நூல் தொடர்பான கருத்துக்களைத் திரட்டுவர்.<br>• அன்புள்ள இறைதந்தைக்கு பதில் அன்பினைச் செலுத்த வேண்டும் என்பதை ஏற்றுக் கொள்வர்.<br>• திரட்டிய தகவல்களை ஆக்கங்களாக முன்வைப்பர்.<br>• இறையியில் பாரம்பரியங்களை நூல் பற்றிய விளக்கத்தினைப் பெறுவதற்காகப் பயன்படுத்துவர்.<br>• இறையன்பினூடாகப் பிறரோடு செயற்படுவர். | 02 |
| | 11.1.2 இணைத்திருமுறை நூல்களை அன்றாட வாழ்வில் பலன்பெறும் வகையில் பயன்படுத்துவர். | **2. இணைத்திருமுறை நூல்கள்**<br>• இணைத்திருமுறை நூல்கள் 7<br>• ஏழு நூல்களும் செப்டுவாஜின்றிலிருந்து எடுக்கப்பட்டவை.<br>• செப்டுவாஜின்ற் - பிரதிகள் பற்றிய சிறு அறிமுகம்<br>• ஏழு நூல்களும் இறை ஏவுதலால் எழுதப் பட்டதற்கான சான்றுகள். | • இணைத்திருமறை நூல்கள் தொடர்பான தகவல்களைத் திரட்டுவர்.<br>• இணைத்திருமறை நூல்கள் இறைவார்த்தை என ஏற்றுக்கொள்வர்.<br>• திரட்டிய தகவல்களை ஆக்கங்களாக முன்வைப்பர்.<br>• இணைத்திருமறை நூல்களை அன்றாட வாழ்வில் பலன் பெறும் வகையில் பயன்படுத்துவர்.<br>• குழுக்களில் ஒத்துழைப்புடன் செயற்படுவர். | 02 |
| | 11.1.3 தமது இறைவாக்குப் பணியை விளங்கிச் சான்றுபகர்வர். | **3. இறைவாக்கினர்.**<br>• நபி / Prophet என்ற சொற்களின் அர்த்தம்.<br>• இறைவாக்கினர் பயன்படுத்தும் மூவகைச் சொற்கள்<br>• இறைவாக்கினர்களின் வகைகள் -2 | • இஸ்ராயேல் இறைவாக்கினர் தொடர்பான தகவல்களைத் திரட்டுவர்.<br>• கிறிஸ்தவன் என்ற வகையில் இறைவாக்கினர் அழைப்பு பெற்றுள்ளமையை ஏற்றுக்கொள்வர்.<br>• திரட்டிய தகவல்களை ஆக்கங்களாக முன்வைப்பர். | 02 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளை |
|---|---|---|---|---|
| | | (i) எழுத்துவடிவம் பெற்றோர்.<br>(ii) எழுத்துவடிவம் பெறாதோர்.<br>• எழுத்து வடிவமைத்த இறைவாக்கினர்கள்.<br>• பெரிய இறைவாக்கினர் - 3<br>• சிறிய இறைவாக்கினர் - 12 அவர்களின் பெயர்கள்.<br>• பெரிய இறைவாக்கினர் மூவரின் அழைப்பு | • தமது இறைவாக்குப் பணியை விளங்கிக்கொண்டு சான்று பகர்வர்.<br>• இறைவனின் செய்திக்கு பதிலளிக்கும்படி பிறரை ஊக்குவிப்பர். | |
| | 11.1.4 தமது வாழ்வினூடாக நற்செய்திக்கு சான்று பகர்வர். | **4. நற்செய்தி**<br>• ஆசிரியத்துவம்<br>• ஒவ்வொரு காலமும் நற்செய்தியும் எழுதப்பட்ட காலமும்<br>• ஒவ்வொரு நற்செய்தியின் வேறு பெயர்கள்<br>• ஒவ்வொரு நற்செய்தியும் எழுதப்பட்ட நோக்கம். ஒவ்வொரு நற்செய்திகளின் படிப்பினைகளும், பண்புகளும். | • நற்செய்தி நான்கு தொடர்பான தகவல்களைத் திரட்டுவர்.<br>• சவால்களுக்கு முகங்கொடுத்து நம்பிக்கைக்குச் சான்று பகர வேண்டுமென்பதை ஏற்றுக்கொள்வர்.<br>• திரட்டிய தகவல்களை ஆக்கங்களாக முன்வைப்பர்.<br>• தமது வாழ்க்கையின் வழியாக நற்செய்திக்குச் சான்று பகர்வர்.<br>• பிறருக்கு ஓர் நற்செய்தியாக இருப்பர். | 02 |
| 2. இறை வெளிப்பாட்-டுக்குப்பதில் அளித்து நம்பிக்கையோடு வாழ்வர். | 11.2.1 படைப்பின் எழிலை அனுபவித்து இறைவனைப் புகழ்வர். | **5. படைப்பு**<br>• வரலாற்றுக்கு முற்பட்ட காலம் பற்றிய அறிமுகம்<br>• படைப்புப் பற்றிய இரு கதைகள்<br>(அ) 1ஆம் படைப்பு - தொ.நூ 1:1-2:4<br>(ஆ) 2ஆம் படைப்பு - | • தொடக்க நூலிலுள்ள படைப்புக் கதைகள் தொடர்பான தகவல்களைத் திரட்டுவர்.<br>• கடவுள் இப்பிரபஞ்சத்தின் படைப்பாளர் என்பதை ஏற்றுக்கொள்வர்.<br>• திரட்டிய தகவல்களை ஆக்கங்களாக முன்வைப்பர். | 02 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளை |
|---|---|---|---|---|
| | | • **1ஆம் படைப்பு** (குரு மரப்பிற்குரியது)<br>• 7 நாள் படைப்பின் இறையியல் விளக்கம் (சபாத் - நாளின் மேன்மை)<br>• மனிதனின் மேன்மை - இறைசாயல்<br>• இறை உருவிலும் சாயலிலும் தொ.நூ 1:26<br>  • அறிவு<br>  • சுதந்திரம்<br>  • அழியாத ஆன்மா<br>• **2ஆம் படைப்பு** தொ.நூ 2:4 - 25 (து.மரபிற்குரியது)<br>• மனித மேன்மை - உயிர்மூச்சு<br>• பெண் - ஆதாமின் விலா எலும்பிலிருந்து படைக்கப் பட்டவள் என்பதன் செய்தி | • மனித மாண்பின் மேன்மையை பாதுகாத்து அதற்கேற்ப வாழ்வர்.<br>• ஆண், பெண் வேறுபாடுகளுக்கு மதிப்பளிப்பர். | |
| | 11.2.2 நன்மை, தீமையை விளங்கி, பாவத்தின் அடிமைத் தனத்திலிருந்து மீட்புப் பெறுவர். | **6. பாவம் (மனித வீழ்ச்சி)**<br>• **ஆதாம் - ஏவாள்(தொ.நூ 3)**<br>  • பாம்பின் மூலம் பெறும் செய்தி<br>  • நன்மை, தீமை அறியும் மரம்.<br>  • இறைவனின் கட்டளை (தொ.நூ 2/17)<br>  • வெள்ளப்பெருக்கின் நோக்கம் பாவத்தை அகற்றுதல். | • மனிதன் பாவத்தில் வீழ்ந்தமை தொடர்பான தகவல்களைத் திரட்டுவர்.<br>• மனச்சான்றுக்கு கீழ்ப்படிய வேண்டுமென்பதை ஏற்றுக் கொள்வர்<br>• திரட்டிய தகவல்களை ஆக்கங்களாக முன்வைப்பர்.<br>• சுவைக்கு அடிமையாகாமல் சரியான தீர்மானம் எடுப்பர்.<br>• நேரிய வழியைக் காட்டுபவர்களுக்குக் கீழ்ப்படிவர். | 02 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளை |
|---|---|---|---|---|
| | | • கீழ்படியாமை (தொ.நூ3/11-13)<br>• தண்டனையும் விசாரணை -யும் (தொ.நூ 3/11-19<br>• இரக்கம் காட்டுதல். (தொ.நூ 3/15 -3/21)<br>• **காயீன் ஆயேல் (தொ.நூ 4)**<br>• இறைவனின் தண்டனை (தொ.நூ 4/6-7)<br>• காயின் கட்டளையை மீறுதல். (தொ.நூ 4/8)<br>• விசாரணையும் தண்டனை விதித்தலும் (தொ.நூ4/9-12)<br>• இறைவனின் இரக்கம் தொ.நூ 4/15<br>• **நோவாவின் கதை (தொ.நூ 6:1- 9 : 17)**<br>• வெள்ளப்பெருக்கிற்கான காரணம்<br>• வெள்ளப்பெருக்கின் நோக்கம் பாவத்தை அகற்றுதல். | | |
| | 11.2.3 அன்றாட வாழ்வில் இறை பராமரிப்பை அனுபவிப்பர். | **7. விடுதலைப் பயணம்**<br>• பின்னணி (அடிமைத்தனம், அடக்கி ஆளுதல்)<br>• மோசேயின் பிறப்பு<br>• அழைப்பு<br>• பத்துப் பெருந்துன்பங்கள்<br>• செங்கடல் கடத்தல்.<br>• பாலை வனத்தில் இறை பராமரிப்பு. | • விடுதலைப் பயணம் தொடர்பான தகவல்களைத் திரட்டுவர்.<br>• இறைபராமரிப்பைப் பெறுவதற்கு இறைவனில் நம்பிக்கை வைத்து வாழ வேண்டுமென்பதை ஏற்றுக்கொள்வர்.<br>• திரட்டிய தகவல்களை ஆக்கங்களாக முன்வைப்பர்.<br>• அன்றாட வாழ்வில் இறைபராமரிப்பை அனுபவிப்பர்.<br>• பிறர் துன்பப்படும்போது உதவி செய்வர். | 02 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளை |
|---|---|---|---|---|
| | 11.2.4 மீட்பின் செயற்பாட்டை விளங்கி வாக்குறுதிகளுக்கு பிரமாணிக்கமாக நடந்து கொள்வர். | **8. சீனாய் உடன்படிக்கை**<br>• ஆதாமுடன் உடன்படிக்கை (தொ.நூ. 3/15)<br>• நோவா உடன்படிக்கையும் அடையாளமும் (தொ.நூ.9/8-11)<br>• ஆபிரகாம் உடன்படிக்கையும் அடையாளமும் (தொ.நூ 15/1-21 - 17/1 - 14) )<br>• சீனாய் உடன்படிக்கையும 10 கட்டளையும் வி.ப.20ஆம் அதிகாரம் | • இறைவன் மனிதனோடு செய்துகொண்ட உடன்படிக்கை தொடர்பான தகவல்களைத் திரட்டுவர்.<br>• இறைகட்டளைகளை கடைப்பிடிக்க வேண்டுமென்பதை ஏற்றுக்கொள்வர்.<br>• திரட்டிய தகவல்களை ஆக்கங்களாக முன்வைப்பர்.<br>• ஒழுக்கமுள்ளவர்களாக வாழ்வர்.<br>• பிறருக்குக் கொடுத்த வாக்கை நிறைவேற்றுவர். | 02 |
| | 11.2.5 திருமுழுக்கு யோவானைப் பின்பற்றி இன்றைய சமூகத்தில் இறைவாக்கினராகச் செயற்படுவர். | **9. திருமுழுக்கு யோவான்**<br>• பிறப்பு - அறிவிப்பு லூக்1/5 - 25<br>• பிறப்பு லூக் 2/57-66<br>• போதனை லூக் 3/1-20<br>• இறப்பு மத் 14/1-12 | • திருமுழுக்கு யோவான் தொடர்பான தகவல்களைத் திரட்டுவர்.<br>• திருமுழுக்கு யோவானின் போதனைகளுக்கேற்ப வாழ வேண்டும் என்பதை ஏற்றுக்கொள்வர்.<br>• திரட்டிய தகவல்களை ஆக்கங்களாக முன்வைப்பர்.<br>• சமூகத்திலே ஓர் இறைவாக்கினராகச் செயலாற்றுவர்.<br>• தன்னிடமுள்ளதைப் பிறரோடு பகிர்ந்து கொள்வர். | 02 |
| | 11.2.6 பங்கில் பல்வேறு மறைத்தூதுப் பணிகளில் ஆர்வத்தோடு செயற்படுவர். | **10. இயேசுவின் மறைத் தூதுப் பணி**<br>• இயேசுவின் திருமுழுக்கு லூக் 3/21-22<br>• சோதனை லூக் 4∴1-13<br>• நாசரேத்தில் போதனை லூக் 4/16-21 | • இயேசுவின் தூதுப்பணி தொடர்பான கருத்துக்களைத் திரட்டுவர்.<br>• மக்கள் பணிக்காக எமது வாழ்வை அர்ப்பணம் செய்ய வேண்டுமென்பதை ஏற்றுக்கொள்வர்.<br>• திரட்டிய தகவல்களை ஆக்கங்களாக முன்வைப்பர். | 02 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளை |
|---|---|---|---|---|
| | | • இறையரசைப் பற்றிய புதுமைகளின் வகைகள்.<br>• எழுபத்திரண்டு சீடர்களின் மறைத் தூதுப் பணி லூக் 10/1- 12 | • மறைத்தூதுப் பணிகளில் ஈடுபடுவர்.<br>• பங்கிலுள்ள மறைத்தூதுப் பணிகளுக்கு ஒத்துழைப்பு வழங்குவர். | |
| | 11.2.7 இறையாட்சியின் மதிப்பீடுகளினூடாக தமது வாழ்வை ஒளிமயமாக்கிக் கொள்வர். | **11. இறையாட்சி**<br>• இறையாட்சி அறிமுகம்<br>• இறையாட்சி வந்துவிட்டது என்பதை அருஞ்செயல்கள் மூலம் உறுதிப்படுத்துதல். லூக் 11/20<br>• போதனை மூலம் - இறையாட்சி<br>• மலைப்பொழிவு மத் 5,6,7<br>• எட்டுப் பேறுகள் மத் 5/1-12<br>• உவமைகள் (இறையாட்சிபற்றியவை) மத் 13ஆம் அதிகாரம்.<br>• தேசிய விழுமியங்கள். | • இறையாட்சி தொடர்பான தகவல்களைத் திரட்டுவர்.<br>• இலங்கைக்குரய விழுமியங்களை வாழ வைக்க வேண்டுமென ஏற்றுக்கொள்வர்.<br>• திரட்டிய தகவல்களை ஆக்கங்களாக முன்வைப்பர்.<br>• இறையாட்சியின் மதிப்பீடுகளை வாழ வைப்பர்.<br>• எல்லோரோடும் நல்ல மனித உறவினைப் பேணுவர். | 02 |
| 3. அருளடையாளங்கள் வழியாக கிறிஸ்துவுடன் இணைந்து பெற்றுக் கொண்ட புதுவாழ்வுக்குச் சான்று பகர்வார். | 11.3.1 அருளடையாளங்கள் வழியாக முதிர்ச்சியடைந்த கிறிஸ்தவராகி முன்மாதிரியாக வாழ்வார். | **12. திருமுழுக்கு உறுதிப்பூசுதல்.**<br>• திருமுழுக்கின் அவசியம். யோவா 3/5<br>• இயேசுவின் இறுதிக் கட்டளை கொடுத்து அனுப்புதல். மத்28/19-20 • திருமுழுக்கினால் கிட்டும் அருள் வரங்கள்<br>• ஞானப் பெற்றோர்களாக' இருப்பதற்குரிய தகுதிகள். | • திருமுழுக்கு, உறுதிப்பூசுதல் தொடர்பான தகவல்களைத் திரட்டுவர்.<br>• முதிர்ச்சி பெற்ற கிறிஸ்தவராக முன்மாதிரிகையாக வாழ்வதற்கு விருப்பத்தைத் தெரிவிப்பர்.<br>• திரட்டிய தகவல்களை ஆக்கங்களாக முன்வைப்பர்.<br>• முதிர்ச்சி பெற்ற கிறிஸ்தவராக வாழ்வர்.<br>• உரிய வயதில் திருமுழுக்குப் பெறுவதற்கு பிறரை ஊக்கப்படுத்துவர். | 02 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளை |
|---|---|---|---|---|
| | | • திருமுழுக்கின் வெளி அடையாளங்கள். - அதன் அர்த்தம்.<br>• திருச்சபைச் சட்டங்கள். 862,865,851,867,868,872<br>• உறுதிப்பூசுதல்<br>• மீட்பின் வரலாற்றில் உறுதிப்பூசுதல்.<br>• பெறுவதற்கான தகுதிகள்<br>• வழிபாட்டு முறையும் அர்த்தமும்.<br>• கிடைக்கும் அருள்வரங்கள். க.தி.ம 1302 - 1305<br>• பெறுவதற்கு தகுதியானவர்கள் க.தி.ம 1306 - 1311<br>• வழங்குபவர். க.தி.ம 1312 - 1318 | | |
| | 11.3.2 குணமளிக்கும் அருளடையாளங்களின் அருள் வளங்களால் ஆன்ம உடல் நலம் பெறுவர். | **13. குணமளிக்கும் அருளடையாளங்கள்.**<br>• **ஒப்புரவு**<br>• பல்வேறு பெயர்கள். க.தி.ம 1423 - 1424<br>• உள்ளார்ந்த மனமாற்றம். க.தி.ம 1430 - 1433<br>• மனமாற்றத்தின் முறைகள் க.தி.ம 1434 - 1439<br>• மனமாற்றம் அடைபவர்கள் செய்ய வேண்டியவை க.தி.ம 1450 - 1460<br>• கைம்மாறு க.தி.ம 1468 - 1470 | • குணமளிக்கும் இரு அருளடையாளங்கள் தொடர்பான தகவல்களைத் திரட்டுவர்.<br>• தேவையான சந்தர்ப்பங்களில் குணமளிக்கும் அருளடையாளங்களைப் பெற வேண்டுமென்பதை ஏற்றுக் கொள்வர்.<br>• திரட்டிய தகவல்களை ஆக்கங்களாக முன்வைப்பர்.<br>• உண்மையான மனம் வருந்தலின் மூலம் மன மாற்றத்தினை ஏற்படுத்திக் கொள்ளலாம்.<br>• நோயாளரைத் தரிசித்து அவர்களுக்காகச் செபிப்பர். | 02 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளை |
|---|---|---|---|---|
| | | • **நோயில் பூசுதல் அருளடையாளம்.**<br>• யேசு நோயாளரைக் குணமாக் குதல். க.தி.ம 1503 - 1510<br>• புதிய ஏற்பாட்டில் யாக்கோபு யாக் 5/14-15<br>• திருத்தூதர் நோயாளரைக் குணமாக்குதல். மாற் 6.∵15 தி.ப.3.∵1-10<br>• அருளடையாளம் பற்றிய திருச்சபைப் படிப்பினை க.தி.ம 1511 - 1513<br>• வழிபாடு<br>• பெறும் நன்மைகள் / அருள்<br>• வீட்டை ஆயத்தம் செய்தல்<br>• நோயாளரை ஆயத்தம் செய்தல். | | |
| | 11.3.3 குருவத்திற்கு மதிப்பளித்து அந்த பணியினால் கிடைக்கும் உயர்ந்த பலனைப் பெற்றுக்கொள்வர். | **14. குருத்துவம்.**<br>• குருத்துவம்.<br>• அறிமுகம் - சமூகப் பணியின் அருளடையாளங்கள்.<br>• ஏனைய அருளடையாளங்களும் இதற்குமுள்ள வேறுபாடு<br>• மறைத்தூதுப் பணியை ஒப்படைத்தல்.<br>• இறை மக்களை உருவாக்குதல் | • குருத்துவம் தொடர்பான தகவல்களைத் திரட்டுவர்.<br>• அருட்பணியாளருக்காக செபிக்க வேண்டுமென்பதை ஏற்றுக்கொள்வர்.<br>• திரட்டிய தகவல்களை ஆக்கங்களாக முன்வைப்பர்.<br>• அருட்பணியாளர்களின் பணியைச் சிறப்புறச் செய்வதற்காக செயற்திறனுடன் உதவுவர்.<br>• அருட்பணியாளருக்குக் கீழ்ப்படிந்து வாழ்வர். | 02 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளை |
|---|---|---|---|---|
| | | குருக்கள்<br>மறைமாவட்ட குருக்கள் — துறவறக் குருக்கள்<br>ஆயரின் கீழ் — சபைத் தலைவர் கீழ்<br>வாக்குறுதி 2 தூய்மை, பணிவு — வாக்குறுதி 3 தூய்மை, எளிமை பணிவு<br>• பொறுப்புக்கள் - குருத்துவத்தின் முழுமை<br>• குருக்களின் கடமைகள்.<br>• திருத்தொண்டர்களின் கடமைகள்.<br>• குருக்கள் மட்டில் பொதுநிலை யினரின் கடமைகள் வழங்குபவர்.<br>• பெற்றுக் கொள்ள தகுதி யுள்ளோர். க.தி.ம 1577 - 1580 | | |
| | 11.3.4 கிறிஸ்தவ குடும்பத்தின் ஒருமைப்பாட்டையும் புனிதத்தையும் அனுபவித்து அறிந்துகொள்வர். | **15. திருமணம்**<br>• திருமணம்<br>• உடன்படிக்கை - செல்லுபடி யற்றதாக முடியாதது.<br>• கிறிஸ்தவ திருமணத்தின் பண்புகள். - 2 | • திருமணம் தொடர்பான தகவல்களைத் திரட்டுவர்.<br>• திருமணம் செய்யும்போது கத்தோலிக்கர் ஒருவரைத் தெரிவுசெய்ய வேண்டுமென்பதை ஏற்றக்கொள்வர்.<br>• திரட்டிய தகவல்களை ஆக்கங்களாக முன்வைப்பர்.<br>• கிறிஸ்தவ குடும்பத்தின் தூய்மையை அனுபவிப்பர்.<br>• குடும்பத்தின் ஒற்றுமைக்காக செயற்படுவர். | 02 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளை |
|---|---|---|---|---|
| | | • கிறிஸ்தவ திருமணத்தின் நோக்கம். - 2<br>• கத்தோலிக்க திருமணத்திற்கான சட்டபூர்வமான தடைகள்.<br>• திருமணத்திற்கான வெளி அடையாளம்.<br>• திருமணத்தை வழங்குபவர்.<br>• விவாகரத்திற்கும் செல்லுபடியற்ற திருமணத்திற்கும் உள்ள வேறுபாடு<br>• அருளடையாளமாவதற்கு<br>- இருவரும் திருமுழுக்குப் பெற்றிருத்தல்.- திருப்பலியில் நிறைவேற்றுதல். இருவரும் கத்தோலிக்கராக இருப்பதன் நன்மை. | | |
| | 11.3.5 துறவற அர்ப்பண வாழ்வின் மூலம் இறையாட்சியை இவ்வுலகில் பரப்புவதற்கு எடுக்கும் முயற்சியை ஏற்றுக்கொள்வர். | **16. துறவற வாழ்வு**<br>• துறவற வாழ்வின் வரலாற்றுப் பின்னணி<br>• வாக்குறுதிகள் | • துறவற வாழ்வு தொடர்பான தகவல்களைத் திரட்டுவர்.<br>• தமது அழைப்புப் பற்றி ஆழமாகச் சிந்திக்க வேண்டுமென்பதை ஏற்றுக்கொள்வர்.<br>• திரட்டிய தகவல்களை ஆக்கங்களாக முன்வைப்பர்.<br>• துறவிகளின் பணிகளைப் பாராட்டுவர்.<br>• துறவிகளின் மறைதூதுப்பணிக்கு உதவி நல்குவர். | 02 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளை |
|---|---|---|---|---|
| | | துறவற வாழ்வு<br>துறவறக் குருக்கள் / குருக்கள் அல்லாத துறவிகள்<br>அருட் சகோதரர்கள் / துறவற அருட்சகோதரிகள்<br>உ- ம்<br>• இலங்கையில் உள்ள துறவிகள் சபைகள்.<br>• ஒவ்வொரு சபையினதும் மறைத் தூதுப் பணியின் சுருக்கம்.<br>• சபைகள் - பணிகள்<br>• துறவற வாழ்வின் பண்புகள் -3<br>• செபவாழ்வு<br>• பணிவாழ்வு<br>• குழும வாழ்வு<br>(ச.ஏ.எண் 46, க.தி. ம 914 - 933) | | |
| | 11.3.6 வாஞ்சை நிறைந்த அர்ப்பணத்துடன் மறைப்பணியை ஆற்றுவதற்கு தம்மை கையளிப்பர். | **17. பொது நிலையினரின் மறைத்தூதுப் பணி**<br>• பொதுக் குருத்துவம் - பணிக்குருத்துவம் வேறுபாடு<br>• பொதுக் குருத்துவத்தின் மூவித பணிகள்.<br>• பொதுக் குருத்துவத்தின் கடமைகள்.<br>• அவற்றை நிறைவேற்ற திருச்சபையிலுள்ள பல்வேறு பக்தி சபைகள். | • பொதுநிலையினரின் மறைதூதுப்பணி தொடர்பான தகவல்களைத் திரட்டுவர்.<br>• செலார்வமுள்ள மறைதூதுவராகப் பணியாற்ற தமது விருப்பத்தை வெளிப்படுத்துவர்.<br>• திரட்டிய தகவல்களை ஆக்கங்களாக முன்வைப்பர்.<br>• பங்கில் உள்ள பொதுநிலையினரின் அப்போஸ்தலிக்க சபைகளில் செயலார்வமுள்ள அங்கத்தவராகப் பணியாற்றுவர். | 02 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளை |
|---|---|---|---|---|
| 4. இறை கட்டளைகளைக் கடைப்பிடித்து அன்பாக வாழ்வர். | 11.4.1 இறைவனின் படைப்பை விருத்தி செய்து பாதுகாத்து பயனடைவர். | • பக்தி சபைகளின் நோக்கமும், பணிகளும்.<br>• மாணவர்கள் உறுப்பினர் களாகப் பங்கேற்கும் சபைகள் க.தி.ம 897 - 913 வ.ச.ஏடு எண் 37,<br><br>**18. சுற்றாடலைப் பாதுகாப்போம்.**<br>• படைப்பின் 1ஆம் கதை<br>• மனிதன் இறைசாயலிலும் உருவிலும் படைக்கப் பட்டுள்ளான்.<br>• இறைவனின் செயல் படைத்தல்.<br>• மனிதனின் செயல் படைப்பை மென்மேலும் விருத்தி செய்தல். தொ.நூ 1/27<br>• ஆண்டு நடத்துதல்.தொ.நூ 1/28<br>• (றதா - (எபிரேயம்) பேணிப் பாதுகாத்தல் வழிநடத்திப் பாதுகாத்தல்)<br>**2ஆவது கதை - இறைவன் மனிதனின் இரு பொறுப்புக்களை ஒப்படைக்கிறார். தொ.நூ 2/15**<br>1. பயிரிடுதல், அவாத்<br>2. பாதுகாத்தல் - ஷாமர்- வேலை செய்வதோடு படைப் பாற்றல் பராமரித்தல். | • பொதுநிலையினரின் மறைதூதுப் பணியினூடாக பிறருக்குப் பணியாற்றுவர்.<br><br>• படைப்பின் 1ம், 2ம் கதைகளில் இறைவனின் படைப்புச்செயல் பற்றிய தகவல்களைத் திரட்டுவர்.<br>• சுற்றாடலை மாசுபடுத்தாமல் விருத்தி செய்தல் ஒவ்வொருவரினதும் கடமை என்பதை ஏற்பர்.<br>• 'சுற்றாடலைப் பாதுகாப்போம்' எனும் தலைப்பில் விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சி ஒன்றைச் செய்து காட்டுவர்.<br>• இறைபடைப்பை விருத்திசெய்து பாதுகாப்பர்.<br>• பாடசாலை சுற்றாடலை அழகுபடுத்தப் பாடசாலைச் சமூகத்தோடு ஒத்துழைப்பர். | 02 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளை |
|---|---|---|---|---|
| | | • மனிதனின் பொறுப்பு<br>• படைப்பைப் பாதுகாத்து, விருத்தி செய்தலும், பயனடைதலும். | | |
| | 11.4.2 சமாதானத்தின் கருவியாகச் சமூக செயற்பாடுகளில் ஈடுபடுவர். | **19. சமாதானம்**<br>• ஷாலோம் - சொல்லிருந்து வந்தது. வாழ்த்து, முழுமையான நிறைவு.<br>• எதிர்பார்ப்புக்கள் நிறைவேறி வெளிக்காட்டும் மனத்திருப்தி<br>• சமாதானம் பற்றிய கிறிஸ்தவ படிப்பினைகள் க.தி.ம.2302 - 2306<br>• யுத்தத்தைப் புறக்கணித்தல். க.தி.ம.2307 - 2317<br>• புனித பிரான்சிஸ் அசிசியார் - செபம். | • யுத்தம் - அமைதி பற்றிய தகவல்களை சேகரிப்பர்.<br>• அமைதியின் கருவியாக இருக்க வேண்டும் என்பதை ஏற்பர்.<br>• சேகரிக்கப்பட்ட தகவல்கள் மூலம் ஆக்கம் ஒன்றை முன்வைப்பர்.<br>• யுத்தத்தைப் புறக்கணிப்பர்.<br>• அமைதியை ஏற்படுத்த ஏனையோரோடு ஒத்துழைப்பர். | 02 |
| | 11.4.3 ஆன்ம உடல் சார்ந்த இரக்கச்செயல்கள் வழியாக கிறிஸ்தவ அன்பை வெளிப்படுத்துவர். | **20. ஆன்ம சரீர நற்செயல்கள்.**<br>• ஆன்மாவைச் சார்ந்த நற்செயல்கள் - 7<br>• உடலைச் சார்ந்த நற்செயல்கள் - 7<br>• பின்னணி மத் 25/31-44 தோபித் 1-17 அதி<br>• ஒவ்வொரு நற்செயல்கள் பற்றிய சிறுவிளக்கம் | • இரக்கச் செயல்கள் பற்றிய தகவல்களைச் சேகரிப்பர்.<br>• இரக்கச்செயல்களே விண்ணிற்குச் செல்ல தகுதியுடையோராக்கும் என்பதை ஏற்றுக்கொள்வர்.<br>• இரக்கச் செயல்கள் தொடர்பான ஆக்கம் ஒன்றை சமர்ப்பிப்பர்.<br>• பசித்திருப்போருக்கு உணவளிப்பர்.<br>• நோயாளரைத் தரிசிப்பர். | 02 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளை |
|---|---|---|---|---|
| | 11.4.4 திருச்சபையின் கட்டளைகளைப் பின்பற்றிப் பக்தியுள்ள கத்தோலிக்கராக வாழ்வர். | **21. திருச்சபையின் கட்டளைகள்**<br>• திருச்சபையின் கட்டளைகள் 6<br>• ஒவ்வொரு கட்டளைகள் பற்றிய விளக்கம். | • திருச்சபையின் கட்டளைகள் பற்றிய தகவல்களைத் திரட்டுவர்.<br>• இறைமக்களாக வாழ்வதற்கு கட்டளைகள் அவசியம் என்பதை ஏற்றுக்கொள்வர்.<br>• திரட்டிய தகவல்களைக் கொண்டு ஆக்கம் ஒன்றினை சமர்ப்பிப்பர்.<br>• குறிப்பிட்ட தினங்களில் மாமிசத்தவிர்ப்பு அனுசரிப்பர்.<br>• திருச்சபையின் தாபரிப்புக்கு உதவுவர். | 02 |
| 5. செபத்தின் மூலம் ஊட்டம் பெற்று இறைவனுடனும் மனிதனுடனும் ஆழமான உறவை வளர்த்து கொள்வர். | 11.5.1 யேசு கற்பித்த செபத்தின் பண்புகளை தமது வாழ்வில் நிஜப்படுத்தி வாழ முயற்சிப்பர். | **22. இயேசு கற்பித்த செபம் / ஆண்டவரின் செபம்**<br>• வேண்டுதல் 7 (மத் 6/9-13, லூக் 11/2-4)<br>• இரு பகுதிகள்,<br>1. இறை புகழ்ச்சி 3<br>2. ஆன்ம உடல் சார்ந்த தேவைகளுக்கானது 4<br>• ஒவ்வொரு வேண்டுதல்கள் பற்றிய சிறிய விளக்கம்.<br>• இயேசு கற்பித்த செபத்தின் கட்டமைப்பு | • இயேசு கற்பித்த செபம் தொடர்பான தகவல்களைத் திரட்டுவர்.<br>• இயேசு கற்பித்த செபத்தைச் சொல்லும்போது சரியாக நிற்கவேண்டிய நிலையை ஏற்றுக்கொள்வர்.<br>• திரட்டிய தகவல்களை ஆக்கமாக முன்வைப்பர்.<br>• இயேசு கற்பித்த செபத்திலுள்ள வேண்டுதல்களை யதார்த்தமாகக் கொள்வர்.<br>• பிறரை மன்னிப்பர். | 02 |
| | 11.5.2 மரியன்னையின் மேல் அன்பையும் பக்தியையும் வளர்த்துக் கொள்வர். | **23. மரியன்னைப் பக்தி**<br>• மரியா பற்றிய இறையியல் பின்னணி<br>• அமல உற்பவம்.<br>• விண்ணகத்திற்கு ஆரோபண மானது. க.தி.ம 966 | • மரியன்னையின் பக்தி தொடர்பான தகவல்களைத் திரட்டுவர்.<br>• எமக்காக மரியன்னை மத்தியஸ்தம் வகிக்கின்றாள் என்பதை ஏற்றுக் கொள்வர்.<br>• திரட்டிய தகவல்களை ஆக்கமாக முன்வைப்பர். | 02 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளை |
|---|---|---|---|---|
| | | • மரியன்னை காட்சி கொடுத்த இடங்கள். (லூர்து, பாத்திமா, வேளாங்கண்ணி)<br>• சதா சகாய அன்னையின் புதன்கிழமைப் பக்தி முயற்சி<br>• குடும்ப செபமாலையின் முக்கியத்துவம். | • மரியன்னையின் பக்தி முயற்சிகளில் பக்தியோடு பங்குபற்றுவர்.<br>• பங்கிலே மரியன்னையில் பக்தியை வளர்ப்பதற்காகச் செய்யப்படும் செயற்பாடுகளுக்குப் பங்களிப்புச் செய்வர். | |
| | 11.5.3 திருவிழா நாட்களில் நடைபெறும் மாலை வழிபாடுகளில் பக்தியுடன் பங்குபற்றி இறைவனைப் புகழ்வர். | **24. திருப்புகழ்மாலை**<br>• திருவழிபாடு - 3 பகுதிகள் - அறிமுகம்<br>  • திருப்பலி<br>  • அருளாடையாளம்<br>• திருப்புகழ்மாலை<br>  • திருப்புகழ்மாலை ஆரம்பமும், வளர்ச்சியும்.<br>  • திருப்புகழ்மாலைக்கு பயன் படுத்தப்படும் பாடல்கள்.<br>  - சக்கரியாவின் பாடல் - காலை<br>  - மரியாவின் பாடல் - மாலை<br>  - சிமியோனின் பாடல் - இரவு<br>• ஆலய திருவிழா நாட்களில் திருப்புகழ் மாலையை பக்தியுடன் செபிப்பர்.<br>• திருப்புகழ்மாலையும் துறவற வாழ்வும். | • திருப்புகழ்மாலை தொடர்பான தகவல்களைத் திரட்டுவர்.<br>• இயலுமான வரை இறைவனைப் புகழ்வதில் ஈடுபட வேண்டும் என்பதை ஏற்றுக் கொள்வர்.<br>• திரட்டிய தகவல்களை ஆக்கமாக முன்வைப்பர்.<br>• ஆலயத்தில் நடைபெறுகின்ற திருப்புகழ்மாலை வழிபாடுகளில் பக்தியோடு பங்குபற்றி இறைவனைப் புகழ்வர்.<br>• பங்கில் நடாத்தப்படுகின்ற திருப்புகழ்மாலை வழிபாடுகளை ஆயத்தம் செய்யும் நிகழ்வுகளில் பங்களிப்புச் செய்வர். | 02 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளை |
|---|---|---|---|---|
| | 11.5.4 தமது அன்றாட வாழ்வில் இறைவார்த்தையை வாசித்து தியானித்துப் பலன் பெறுவர். | **25. தியானம்**<br>• தியானம் பற்றிய வரலாறு<br>• இறைவார்த்தை அடிப்படையாகக் கொண்டு தியானித்தல்.<br>• தியானம் ஒன்றை பயிற்சிக்காகச் செய்வர். | • தியானத்தின் வரலாறு தொடர்பான தகவல்களைத் திரட்டுவர்.<br>• தியானத்தின் வழியாக ஆன்மீக வாழ்வை ஊட்டம் பெறச் செய்யலாம் என்பதை ஏற்றுக் கொள்வர்.<br>• வகுப்பறையில் தியானச் செயற்பாடொன்றை நடத்துவர்.<br>• தினமும் வசதியான சந்தர்ப்பத்தில் இறைவார்த்தையைத் தியானப்பர்.<br>• தியானத்தின் மூலம் ஊட்டம் பெற்று பிறரோடு பொறுமையுடன் நடந்து கொள்வர். | 02 |

# கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளுக்கான வழிகாட்டல்

**தேர்ச்சி 1:0** : திருவிவிலியம் தொடர்பான விளக்கத்தைப் பெற்று அன்றாட வாழ்க்கையில் பலன் பெறுவர்.

**தேர்ச்சி மட்டம் 1.1** : இறையியல் சார்ந்த மரபுகள் பற்றிய அறிவினைப் பயன்படுத்தி ஐந்நூலைக் கற்றுக்கொள்வர்.

**பாடவேளை** : 02

**கற்றற் பேறுகள்** :

- ஐந்நூல் தொடர்பான கருத்துக்களைத் திரட்டுவர்.
- அன்புள்ள இறைதந்தைக்கு பதில் அன்பினைச் செலுத்த வேண்டும் என்பதை ஏற்றுக் கொள்வர்.
- திரட்டிய தகவல்களை ஆக்கங்களாக முன்வைப்பர்.
- ஐந்நூல் பற்றிய விளக்கத்தினைப் பெறுவதற்காக இறையியல் பாரம்பரியங்களைப் பயன்படுத்துவர்.
- இறையன்பினூடாகப் பிறரோடு ஒத்துழைத்துச் செயற்படுவர்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள்:**

**படிமுறை 1**

- முற்பயிற்சியோடு இணைப்பு 2இல் உள்ள உரையாடலை வகுப்பில் செயற்படுத்தி கீழ்க் காணப்படும் கருத்துக்கள் வெளிப்படும் வகையில் கலந்துரையாடலை நடத்துங்கள்.

  - ஐந்நூலைச் சேர்ந்த நூல்களின் எண்ணிக்கை
  - ஐந்நூலின் பெயர்கள்
  - ஐந்நூலின் வேறு பெயர்கள்
  - ஐந்நூலின் உள்ளடக்கம்
    - இறைவன் பிரபஞ்சத்தையும் மனிதனையும் படைத்தல்.
    - மனிதன் பாவத்தில் வீழ்தல்
    - குலமுதுவர்கள்
    - இஸ்ராயேலரின் எகிப்திய அடிமைத்தனம்
    - விடுதலைப் பயணம்
    - விடுதலைப் பயணத்தின்போது இறைபராமரிப்பு

(20 நிமிடங்கள்)

**படிமுறை 2**

- பொருத்தமான முறையில் மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து, தேவையான தரவிருத்தி உள்ளீடுகளை வழங்கி, குழுச் செயற்பாடுகளில் ஈடுபடுத்தி அவர்களின் செயற்பாடுகளை அவதானித்து தேவையான வழிகாட்டல்களை வழங்குங்கள்.

(30 நிமிடங்கள்)

**படிமுறை 3**

- ஒவ்வொரு குழுவினருக்கும் செயற்பாடுகளை முன்வைப்பதற்கான சந்தர்ப்பத்தை வழங்கி பின்வரும் கருத்துக்களின் அடிப்டையில் பாடத்தைச் சுருக்கமாக விளக்குங்கள்.

  - ஐந்நூலை எழுதுவதற்கு நான்கு இறையியல் பாரம்பரியங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

    1. யாவே (J) பாரம்பரியம்
       - இறைவன் 'யாவே' என அழைக்கப்படுவதால் இப் பெயர் இப்பாரம்பரியத்துக்குக் கிடைத்துள்ளது.

- கதைகளின் வழியாக இறையியல் செய்தி முன் முன்வைக்கப்பட்டுள்ளது.
  உதாரணம் : படைப்புப் பற்றிய இரண்டாம் கதை (தொடக்கநூல் 2: 4அ-25),
  ஆதாம், ஏவாள் (தொடக்கநூல் 3)
  காயின், ஆபேல் (தொடக்கநூல் 4)
- கடவுள் மனிதனுக்கு மிக அருகில் உள்ளார்.
  உதாரணம் : ஏதேன் தோட்டத்தில் கடவுள் மனிதனைத் தேடிச் செல்லல்.

2. எலோகிம் (E) பாரம்பரியம்
   - இறைவன் ‘எலோகிம்’ என அழைக்கப்படுவதால் இப் பெயர் இப்பாரம் பரியத்துக்குக் கிடைத்துள்ளது.
   - இறைவன் மனிதன் இருக்கும் இடத்திலிருந்து வெகு தொலைவில் இருக்கிறார். மனிதன் இறைவனை நெருங்க முடியாது.

     உதாரணம்: மோசே எரிந்தும் தீய்ந்து போகாத முட்செடியின் காட்சியைப் பார்ப்பதற்காக நெருங்கியபோது, அதனை நெருங்க வேண்டாம் எனவும், நீ நிற்கும் இடம் புனிதமானது எனவும், பாதணிகளைக் கழற்றும் படியும் இறைவன் மோசேக்கு கட்டளை இட்டார். (வி.ப 3 : 5)

3. குரு (P) பாரம்பரியம்
   - குருக்களின் படிப்பினைகள் எடுத்துக் காட்டப்படுகின்றன.

     உதாரணம்: படைப்பின் முதலாம் கதை. (தொ.நூ 1 : 1 - 2 : 4 அ)
   - இங்கு ஓய்வுநாளைப் பற்றியும் கூறப்படுகிறது. எனவே ஓய்வு நாளைத் தூய்மையாகக் கடைப்பிடிக்க வேண்டும்.

4. இணைச்சட்டம் (D) பாரம்பரியம்
   - இணைச்சட்ட நூலில் மட்டும் உள்ளது
   - மோசேயின் போதனை முன்வைக்கப்பட்டுள்ளது.

- ஐந்நூலின் முக்கியத்துவம்
  - இப் பிரபஞ்சத்தைப் (உலகை) படைத்தவருக்குப் பிரமாணிக்கமாக இருத்தல் இஸ்ரயேலரின் பொறுப்பாகும்.
  - பிரபஞ்சத்தின் (உலக) மீட்பிற்காக இஸ்ரயேல் மக்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.
  - இது குலமுதுவர்களுக்குக் கொடுத்த வாக்கை நிறைவேற்றுவதாகும்.
  - சட்டங்களைக் கடைப்பிடிப்பதனால் இறைவனின் ஆசீர் உரிமையாகிறது.

(30 நிமிடங்கள்)

**தரவிருத்தி உள்ளீடுகள்** :
- திருவிவிலியம்
- இணைப்பு 1
- இணைப்பு 2

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

தேர்ச்சி மட்டத்திற்கேற்ப, கற்றற் பேறுகள் எய்தப்பெற்ற அளவினைக் கணிப்பிடக் கூடிய வகையில் நியதிகளைத் தயாரிக்கும் சுதந்திரம் ஆசிரியருக்குள்ளது.

## இணைப்பு 1

- பாடநூலின் முதலாவது பாடத்தை வாசித்து, உங்கள் குழு பெற்றுள்ள தலைப்புத் தொடர்பான ஆக்கமொன்றினை முன்வைக்க ஆயத்தம் செய்யுங்கள்.
    - குழு 1: யாவே (J) எலோகிம் (E) பாரம்பரியங்கள்
    - குழு 2: குரு (P) இணைச்சட்டப் (D) பாரம்பரியங்கள்
    - குழு 3: ஐந்நூலின் முக்கியத்துவம்

## இணைப்பு 2

- தொடக்கநூல் : கடவுள் உலகைப் படைத்த விதத்தினை நான் தான் அறிக்கை யிடுகிறேன்.

- இணைச்சட்டம் : நீங்கள் அறிக்கையிடுகின்ற விதத்திலேயா உலகம் படைக்கப்பட்டது?

- தொடக்கநூல் : இல்லை. இல்லை இறைவன் உலகைப் படைத்த விதத்தினை விஞ்ஞானபூர்வமாக எழுதியிருப்பின் விஞ்ஞானத்தில் முன்னேற்ற மடையாத ஆதிகால மனிதனுக்கு அது விளங்கியிருக்க மாட்டாது. அதனால் நான் அதனை உவமை வடிவில் அறிக்கை இடுகிறேன். கடவுள் உலகையும் மனிதனையும் படைத்த விதத்தினை நான் உவமைகளில் கூறவில்லை. கடவுள் உலகைப் படைத்தார் என்பதையே கூறுகிறேன். கடவுள் பிரபஞ்சத்தின் படைப்பாளி என்பதையே கூறுகிறேன்.

- லேவியர் : அப்படியானால் பாவத்தில் விழுந்த விதத்தையும் உவமை வடிவிலா எழுதியிருக்கிறீர்கள்?

- தொடக்கநூல் : ஆம். ஆம். உலகின் ஆரம்பத்திலிருந்தே மனிதன் கடவுளுக்குக் கீழ்ப்படியவில்லை என்பதை எழுதியிருக்கிறேன்.

- எண்ணிக்கை : நான் கேள்விப்பட்டிருக்கும் விதத்தில், முதல் 11 அதிகாரங்களிலும் கூறப்படுகின்ற கதைகளில், உவமைகளில் எக்காலத்துக்கும் பொருத்தமான இறையியல் செய்திகள் பல இருக்கின்றன.

- தொடக்கநூல் : ஆம். ஆம். எனது செய்தி எக்காலத்துக்கும் உரியதாகும். இச் செய்திக்கேற்ப வாழ்கின்றவர்கள் மட்டுமே மீட்புப் பெறுவர். திருவிவிலியத்தின் நோக்கம் விஞ்ஞானமோ, வரலாறோ கற்பிப்பது அல்ல. மனிதனின் மீட்பு ஆகும்.

- விடுதலைப்பயணம்: அப்படியா? நான் அறிக்கை இடுவது இஸ்ரயேல் மக்களை பார்வோன் மன்னனின் அடிமைத்தளையிலிருந்து மீட்டு வாக்களித்த நாட்டுக்கு அழைத்துச் செல்வதாகும்.

- இணைச்சட்டம் : கடவுள் இஸ்ரயேல் மக்களை வாக்களித்த நாட்டை நோக்கிக் கொண்டு சென்றதைப் போன்று எம் அனைவரையும் கடவுள் விண்ணகம் எனும் வாக்களித்த நாட்டுக்கு அழைத்துச் செல்வது நிச்சயமாகும்.

- லேவியர் : உலகின் ஆரம்பத்தையும் மீட்பு வரலாற்றையும் அறிக்கை இடுகின்ற எமக்குக் கூறப்படுகின்ற பொதுவான பெயர் என்ன தெரியுமா?

- எண்ணிக்கை : ஆம். ஆம். நாம் ஆறாம் தரத்தில் ‘‘ஐந்நூல்’’ (பஞ்சாகமம்) எனப் படித்துள்ளோம்.

- விடுதலைப்பயணம்: ஐந்நூல் மட்டுமல்ல, மோசேயின் சட்டங்கள், சட்டம், பஞ்சாகமம் என்றும் கூறப்படுகிறது. ‘தோரா’ என எபிரேய மொழியில் கூறப்படுகிறது.

(இவ்வுரையாடலை நடிக்கின்ற மாணவர்கள் ஐவரதும் ஆடைகளில் ஐந்நூலின் நூல்களின் பெயர்களை ஐந்து அட்டைகளில் எழுதிப் பொருத்தவும்)

**வீட்டுச் சூழல் :**

இறைவனது அன்புக்குப் பிரதி அன்பு செலுத்தப் பழக்குங்கள்.

**தேர்ச்சி 1:0** : திருவிவிலியம் தொடர்பான விளக்கத்தைப் பெற்று அன்றாட வாழ்க்கையில் பலன் பெறுவர்.

**தேர்ச்சி மட்டம் 1.2** : இணைத் திருமுறை நூல்களை அன்றாட வாழ்வில் பலன்பெறும் வகையில் பயன்படுத்துவர்.

**பாடவேளை** : 02

**கற்றற் பேறுகள்** :

- இணைத்திருமுறை நூல்கள் தொடர்பான தகவல்களைத் திரட்டுவர்.
- இணைத்திருமுறை நூல்களை இறைவார்த்தை என ஏற்றுக்கொள்வர்.
- திரட்டிய தகவல்களை ஆக்கங்களாக முன்வைப்பர்.
- இணைத்திமுறை நூல்களை அன்றாட வாழ்வில் பலன் பெறும் வகையில் பயன்படுத்துவர்.
- குழுக்களில் ஒத்துழைப்புடன் செயற்படுவர்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள்:**

**படிமுறை 1**

- இணைப்பு 2ற்கேற்ற போஸ்டரை வகுப்பில் காட்சிப்படுத்தி, கீழ்க் காணப்படும் கருத்துக்களின் அடிப்படையில் கலந்துரையாடலை நடத்துவர்.

  - யூதருடைய திருவிவிலியத்தில் 39 நூல்கள் மட்டுமே உள்ளன.
  - அந்த 39 நூல்களும் பழைய ஏற்பாட்டுக்குரிய நூல்களாகும்.
  - கிறிஸ்தவ திருவிவிலியத்தில் 66 நூல்கள் உள்ளன.
  - அவற்றில் 39 பழைய ஏற்பாட்டுக்கும் 27 புதிய ஏற்பாட்டுக்குமுரியது.
  - கத்தோலிக்க திருவிவிலியத்தில் 73 நூல்கள் உள்ளன.
  - அவற்றில் 46 பழைய ஏற்பாட்டிற்கும் 27 நூல்கள் புதிய ஏற்பாட்டுக்குமுரியவை.
  - இதற்கேற்ப கத்தோலிக்க திருவிவிலியத்தில் 7 நூல்கள் மேலதிகமாய் உள்ளன.
  - இந்த 7 நூல்களும் இணைத்திருமுறை நூல்கள் என அழைக்கப்படுகின்றன.

(15 நிமிடங்கள்)

**படிமுறை 2**

- பொருத்தமான முறையில் மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து, தேவையான தரவிருத்தி உள்ளீடுகளை வழங்கி, குழுச் செயற்பாடுகளில் ஈடுபடுத்தி அவர்களின் செயற்பாடுகளை அவதானித்துத் தேவையான வழிகாட்டல்களை வழங்குங்கள்.

(35 நிமிடங்கள்)

**படிமுறை 3**

- ஒவ்வொரு குழுவினருக்கும் செயற்பாடுகளை முன்வைப்பதற்கான சந்தர்ப்பத்தை வழங்கி பின்வரும் கருத்துக்களின் அடிப்டையில் பாடத்தைச் சுருக்கமாக விளக்குங்கள்.

  - இணைத்திருமுறை நூல்கள் 7 இனதும் பெயர்கள் (தோபித்து, யூதித்து, சாலமோனின் ஞானம், சீராக்கின் ஞானம், பாரூக், மக்கபேயர் முதல் நூல், மக்கபேயர் இரண்டாம் நூல்)
  - இணைத்திருமுறை நூல்கள் கிரேக்க மொழிபெயர்ப்பில் (செப்துவாஜிந்த்) சேர்க்கப்பட்டது.
  - செப்துவாஜிந்த் கி.மு மூன்றாம் நூற்றாண்டில் மொழிபெயர்க்கப்பட்டதாகும்.
  - பொது மொழிபெயர்ப்பைப்போல் ‘செப்துவாஜிந்தில்’ இணைத்திருமுறை நூல்கள் வேறுபடுத்தி காட்டப்படவில்லை.

    உ + ம்: நெகேமியா, <u>தோபித்து</u>, <u>யூதித்து</u>, எஸ்தர், புலம்பல், <u>பாரூக்கு</u>, எசேக்கியேல்

- இதற்கமைய ஏற்றுக்கொள்ளப்பட்டவைக்கும், இணைத்திருமுறைக்கும் அக்காலத்தில் வேறுபாடு இருக்கவில்லை.
- ஏற்றுக் கொள்ளப்பட்டவையும் இணைத்திருமுறை நூல்களும் ஒரே விதமாகக் கவனிக்கப்பட்டுள்ளன.
- புதிய ஏற்பாட்டு நூலாசிரியர்களால் இணைத்திருமுறை நூல்களிலிருந்து 18 மேற்கோள்கள் காட்டப்பட்டிருக்கின்றன.
- இணைத்திருமுறை நூல்கள் இறை ஏவுதலால் எழுதப்படாதவையானால், புதிய ஏற்பாட்டு நூலாசிரியர்கள் அதிலிருந்து பெயர்த்தெடுத்திருக்க மாட்டார்கள் என்பது மட்டுமல்ல, அவற்றைப் பயன்படுத்த வேண்டாமென்று எச்சரித்தும் இருப்பர்.
- புதிய ஏற்பாட்டுக் காலத்தில் இணைத்திருமுறை நூல்கள் உள்ளடக்கப்பட்ட செப்துவாஜிந்த் பொதுவழிபாடுகளில் பயன்படுத்தப்பட்டுள்ளது.
- ஆகவே கத்தோலிக்க திருச்சபை இணைத்திருமுறை நூல்களை இறைவனின் வார்த்தையென கவனத்தில் கொண்டுள்ளது.
- ஆகவே இணைத்திருமுறை நூல்களை இறைவார்த்தையென ஏற்றுக்கொள்ள வேண்டும்.
- மேலும் இணைத்திருமுறை நூல்களை அன்றாட வாழ்வில் பலன் பெறும் வகையில் பயன்படுத்தலாம்.

(30 நிமிடங்கள்)

**தரவிருத்தி உள்ளீடுகள்** :

- திருவிவிலியம்
- இணைப்பு 1
- இணைப்பு 2 இல் உள்ளடக்கப்பட்ட போஸ்டர்

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

தேர்ச்சி மட்டத்திற்கேற்ப கற்றற் பேறுகள் எய்தப்பெற்ற அளவினை கணிப்பிடக் கூடிய வகையில் நியதிகளைத் தயாரிக்கும் சுதந்திரம் ஆசிரியருக்குள்ளது.

**இணைப்பு 1**

- பாடநூலின் இரண்டாவது பாடத்தை வாசித்து, ''இணைத்திருமுறை நூல்கள்'' தொடர்பான ஆக்கமொன்றினை முன்வைக்க ஆயத்தம் செய்யுங்கள்.

**இணைப்பு 2**

(கீழ்க் காணப்படும் அட்டவணையின் வழியாக போஸ்டர் ஒன்றினை ஆக்கமாகச் செய்யுங்கள்.)

திருவிவிலிய நூல்களின் எண்ணிக்கை

| | பழைய ஏற்பாடு | புதிய ஏற்பாடு | மொத்தம் |
|---|---|---|---|
| யூத திருவிவிலியம் | 39 | - | 39 |
| கிறிஸ்தவ திருவிவிலியம் | 39 | 27 | 66 |
| கத்தோலிக்க திருவிவிலியம் | 46 | 27 | 73 |

**வீட்டுச் சூழல் :**

சீராக்கின் ஞான நூலை தினமும் படியுங்கள்.

**தேர்ச்சி 1:0** : திருவிவிலியம் தொடர்பான விளக்கத்தைப் பெற்று அன்றாட வாழ்க்கையில் பலன் பெறுவர்.

**தேர்ச்சி மட்டம் 1.3** : தமது இறைவாக்குப் பணியை விளங்கிச் சான்று பகர்வர்.

**பாடவேளை** : 02

**கற்றற் பேறுகள்** :

- இஸ்ரயேல் இறைவாக்கினர் தொடர்பான தகவல்களைத் திரட்டுவர்.
- கிறிஸ்தவன் என்ற வகையில் இறைவாக்கினர் அழைப்பு பெற்றுள்ளமையை ஏற்றுக்கொள்வர்.
- திரட்டிய தகவல்களை ஆக்கங்களாக முன்வைப்பர்.
- தமது இறைவாக்குப் பணியை விளங்கிக்கொண்டு சான்று பகர்வர்.
- இறைவனின் செய்திக்கு பதிலளிக்கும்படி பிறரை ஊக்குவிப்பர்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள்:**

**படிமுறை 1**

- சாஸ்திரம் கூறும் ஒருவரைப் போன்று பாவனை செய்து சாஸ்திரம் கூறுவதற்கு ஒரு மாணவனுக்குச் சந்தர்ப்பம் வழங்கி கீழ்க் காணப்படும் கருத்துக்கள் வெளிப்படும் வகையில் கலந்துரையாடலொன்றை நடத்துங்கள். (நன்கு நடிக்கத் தெரிந்த மாணவனொருவனை முன்பே ஆயத்தம் செய்து வைத்திருத்தல் பொருத்தமாகும்)

    - சாஸ்திரக்காரன் குறிக்கப்பட்ட ஒரு நபருக்கு எதிர்காலத்தில் நடக்கப்போவதைக் கூறுவான்.
    - இதற்கேற்ப சாஸ்திரக்காரன் குறிப்பிட்ட நபரின் விதியைக் கூறுவான்.
    - ஏனெனில் விதி என்று ஒன்று இல்லையெனினும் விதியென இனங்காணப்படுவதை இறைவனால் மாற்ற முடியும்.
    - ஆகவே விதியை நம்பி எதிர்காலத்தை ஒப்படைப்பது பாவமாகும்.
    - ஏனெனில் ஒவ்வொரு நபரதும் எதிர்காலத்தைத் திட்டமிடுபவர் இறைவனேயாவார்.
    - எனவே இறைவனின் குரலுக்குச் செவிமடுப்பது அனைவரதும் கடமையாகும்.
    - இறைவனின் குரலை இறைவாக்கினர் வெளிப்படுத்துகின்றனர்.
    - இறைவாக்கினர் இறைவனுக்காக பேசுபவர்களாவர்.
    - இவர்கள் இறைவனுக்காக பேசுதல் என்பது ஒரு நபரது விதியையன்று. இறைவனின் செய்திக்கு செவிமடுக்காத போது ஏற்படுகின்ற விளைவுகளையேயாகும்.
    - இறைவனின் செய்திக்கேற்ப வாழ்வைத் திட்டமிடுவதனால் மீட்பு கிட்டுகிறது.

(20 நிமிடங்கள்)

**படிமுறை 2**

- பொருத்தமான முறையில் மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து, தேவையான தரவிருத்தி உள்ளீடுகளை வழங்கி, குழுச் செயற்பாடுகளில் ஈடுபடுத்தி அவர்களின் செயற்பாடுகளை அவதானித்து தேவையான வழிகாட்டல்களை வழங்குங்கள்.

(30 நிமிடங்கள்)

**படிமுறை 3**

- ஒவ்வொரு குழுவினருக்கும் செயற்பாடுகளை முன்வைப்பதற்கான சந்தர்ப்பத்தை வழங்கி பின்வரும் கருத்துக்களின் அடிப்டையில் பாடத்தைச் சுருக்கமாக விளக்குங்கள்.

    - ‘‘நபி’’ ‘‘ப்றோபேராஸ்’’ எனும் சொற்களின் அர்த்தம்.

- இறைவாக்கினர் பயன்படுத்தும் மூவகைச் சொற்கள்.
- ''இறைவன் இவ்வாறு கூறுகிறார்''
- ''இவ்வாறு கூறுவது இறைவனாகிய நானே''
- ''ஆண்டவரின் வாக்கு எனக்கு அருளப்பட்டது''

- இறைவாக்கினர் இரு வகைப்படுவர்.
  1. எழுத்து வடிவம் பெறாதோர்
     - எழுத்து வடிவம் பெறாதோரின் பெயர்கள். (நாத்தான், எலியா, எலிசா, குல்தா, அஹியா, மீக்காயா)
     - எழுத்து வடிவம் பெறாதோரின் பண்புகள்.
       - தியானத்துக்குச் செல்லுதல்.
       - குழுக்களாக வழிபாடுகளில் ஈடுபடுதல்.
       - தமது தூதுப் பணியை உறுதி செய்வதற்காக புதுமைகள் செய்தல்.
     - இவர்களுடைய பெயர்களில் பழைய ஏற்பாட்டில் நூல்கள் இல்லையெனினும் அவர்களுடைய வார்த்தைகளும் செயல்களும் சாமுவேல், அரசர்கள் ஆகிய நூல்களில் உள்ளன.

  2. எழுத்து வடிவம் பெற்ற இறைவாக்கினர்: இவர்களுடைய பெயர்களில் பழைய ஏற்பாட்டில் நூல்கள் உள்ளன. எழுத்து வடிவம் பெற்ற இறைவாக்கினர் இரு வகைப்படுவர்.
     - i பெரிய இறைவாக்கினர் 3. எசாயா, எரேமியா, எசேக்கியேல்
     - ii சிறிய இறைவாக்கினர் 12. ஓசேயா, யோவேல், ஆமோஸ், ஒபதியா, யோனா, மீக்கா, நாகூம், அபகூக்கு, செப்பனியா, ஆகாய், செக்கரியா, மலாக்கி.
     - பெரிய, சிறிய ஆகிய வகைப்படுத்தலின் அடிப்படை இறைவாக்கினரின் நூல்களின் அளவைப் பொறுத்ததாகும்.
     - பெரிய இறைவாக்கினர் மூவரின் அழைப்பு
       - எசாயா 6 : 1 - 13
       - எரேமியா 1 : 1 - 10, 1 : 17 - 19
       - எசேக்கியேல் 1 : 1 - 3, 1 : 15
     - கிறிஸ்தவர்கள் அனைவரும் இறைவாக்கினராக திருமுழுக்கின் மூலம் அபிஷேகம் பெற்றுள்ளனர்.
     - இதற்கேற்ப கிறிஸ்தவர்கள் அனைவரும் இறைவாக்குப் பணியில் ஈடுபட வேண்டும்

(30 நிமிடங்கள்)

**தரவிருத்தி உள்ளீடுகள்**:

- திருவிவிலியம்
- இணைப்பு 1

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

தேர்ச்சி மட்டத்திற்கேற்ப கற்றற் பேறுகள் எய்தப்பெற்ற அளவினைக் கணிப்பிடக் கூடிய வகையில் நியதிகளைத் தயாரிக்கும் சுதந்திரம் ஆசிரியருக்குள்ளது.

**இணைப்பு 1**

- பாடநூலின் மூன்றாம் பாடத்தை வாசித்து, உங்கள் குழு பெற்றுள்ள தலைப்புத் தொடர்பான ஆக்கமொன்றினை முன்வைக்க ஆயத்தம் செய்யுங்கள்.

- குழு 1: இஸ்ரயேல் இறைவாக்கினர் பற்றிய அறிமுகம்.
- குழு 2: எழுத்து வடிவம் பெறாத இறைவாக்கினர்.
- குழு 3: எழுத்து வடிவம் பெற்ற இறைவாக்கினர்.
- குழு 4: பெரிய இறைவாக்கினர் மூவரின் அழைப்பு
  எசாயா 6 : 1 - 13, எரேமியா 1 : 1 - 10, 1 : 17 - 19,
  எசேக்கியேல் 1 : 1 - 3, 1 : 15

**வீட்டுச் சூழல் :**

சாஸ்திரம் கேட்பதை தவிர்க்கவும்.

**தேர்ச்சி 1:0** : திருவிவிலியம் தொடர்பான விளக்கத்தைப் பெற்று அன்றாட வாழ்க்கையில் பலன் பெறுவர்.

**தேர்ச்சி மட்டம் 1.4** : தமது வாழ்வினூடாக நற்செய்திக்குச் சான்று பகர்வர்.

**பாடவேளை** : 02

**கற்றற் பேறுகள்** :

- நான்கு நற்செய்தி தொடர்பான தகவல்களைத் திரட்டுவர்.
- சவால்களுக்கு முகங்கொடுத்து நம்பிக்கைக்குச் சான்று பகர வேண்டுமென்பதை ஏற்றுக்கொள்வர்.
- திரட்டிய தகவல்களை ஆக்கங்களாக முன்வைப்பர்.
- தமது வாழ்க்கையின் வழியாக நற்செய்திக்குச் சான்று பகர்வர்.
- பிறருக்கு ஓர் நற்செய்தியாக இருப்பர்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள்:**

**படிமுறை 1**

- மனிதனுடைய, சிங்கத்தினுடைய, எருதினுடைய, கழுகினுடைய முகமூடிகள் நான்கினை நான்கு மாணவர்களுக்கு அணிவித்து, இணைப்பு 2இல் உள்ளவாறு பாத்திரமேற்று நடித்தலை முற்பயிற்சியோடு வகுப்பில் செயற்படுத்தி, கீழ்க் காணப்படும் கருத்துக்கள் வெளிப்படும் வகையில் கலந்துரையாடல் ஒன்றினை நடத்துங்கள்.

  - நற்செய்தியாளர் நால்வரதும் பெயர்கள்.
  - அவர்களது தனிப்பட்ட தகவல்கள் (இணைப்பு 2 இன் வழியாக)

(15 நிமிடங்கள்)

**படிமுறை 2**

- பொருத்தமான முறையில் மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து, தேவையான தரவிருத்தி உள்ளீடுகளை வழங்கி, குழுச் செயற்பாடுகளில் ஈடுபடுத்தி அவர்களின் செயற்பாடுகளை அவதானித்துத் தேவையான வழிகாட்டல்களை வழங்குங்கள்.

(35 நிமிடங்கள்)

**படிமுறை 3**

- ஒவ்வொரு குழுவினருக்கும் செயற்பாடுகளை முன்வைப்பதற்கான சந்தர்ப்பத்தை வழங்கி பின்வரும் கருத்துக்களின் அடிப்படையில் பாடத்தைச் சுருக்கமாக விளக்குங்கள்.

  - ஒவ்வொரு நற்செய்தியும் எழுதப்பட்ட காலம்
    - மாற்கு : கி.பி 64 - 66
    - மத்தேயு : கி.பி 80 - 90
    - லூக்கா : கி.பி 80 - 85
    - யோவான் : கி.பி 90 - 100

  - ஒவ்வொரு நற்செய்தியும் எழுதப்பட்ட இடம்
    - மாற்கு : உரோமை
    - மத்தேயு : சிரியா, பலஸ்தீனா
    - லூக்கா : சிரியா, அந்தியோக்கியா
    - யோவான் : எபேசு

- ஒவ்வொரு நற்செய்தியினதும் வேறு பெயர்கள்
    - மாற்கு : பாடுகளின் நற்செய்தி
    - மத்தேயு : திருச்சபையின் நற்செய்தி, இறையாட்சியின் நற்செய்தி
    - லூக்கா : ஏழைகளின் நற்செய்தி, பிற இனத்தாரின் நற்செய்தி, இரக்கத்தின் நற்செய்தி
    - யோவான் : ஆன்மீக நற்செய்தி

- ஒவ்வொரு நற்செய்தியினதும் நோக்கம்
    - மாற்கு : நீரோவின் துன்புறுத்தலுக்குள்ளான கிறிஸ்தவர்களைத் தைரியப்படுத்தல்.
    - மத்தேயு : இயேசு புதிய மோசே ஆவார்; புதிய மெசியா எனும் ஆசிரியர் ஆவார்.
    - லூக்கா : இயேசு யூத இனத்தவருக்கு மட்டுமல்ல முழு உலக மக்களதும் மீட்பராவார்.
    - யோவான் : நம்பிக்கையை ஏற்படுத்துவதற்காகும்.

(30 நிமிடங்கள்)

**தரவிருத்தி உள்ளீடுகள்** :

- திருவிவிலியம்
- இணைப்பு 1
- இணைப்பு 2

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

தேர்ச்சி மட்டத்திற்கேற்ப கற்றற் பேறுகள் எய்தப்பெற்ற அளவினை கணிப்பிடக் கூடிய வகையில் நியதிகளைத் தயாரிக்கும் சுதந்திரம் ஆசிரியருக்குள்ளது.

**இணைப்பு 1**

- பாடநூலின் நான்காம் பாடத்தை வாசித்து, உங்கள் குழு பெற்றுள்ள தலைப்புத் தொடர்பான ஆக்கமொன்றினை முன்வைப்பதற்கு ஆயத்தம் செய்யுங்கள்.
    - குழு 1: மாற்கு நற்செய்தி
    - குழு 2: மத்தேயு நற்செய்தி
    - குழு 3: லூக்கா நற்செய்தி
    - குழு 4: யோவான் நற்செய்தி

**இணைப்பு 2**

- மனிதன் : நான் தான் மத்தேயு நற்செய்தியின் அடையாளம். மத்தேயு நற்செய்தியை எழுதியவர் புனித மத்தேயு ஆவார். இவர் இயேசுவினது திருத்தூதராவார். அவரது தந்தை அல்பேயு. அழைக்கப்படுவதற்கு முன்னர் இவர் ஒரு வரிதண்டுபவர்.

- சிங்கம் : நான் தான் மாற்கு நற்செய்தியின் அடையாளம். மாற்கு நற்செய்தியை எழுதியவர் யோவான் மாற்கு ஆவார். இவரது தாயார் மரியா. இவர் புனித பேதுருவின் சீடனாக இருப்பதோடு அவரது மொழிபெயர்ப்பாளரு மாவார். பேதுருவின் மொழிபெயர்ப்பாளராக இயேசுவைப் பற்றிய அனேக தகவல்களை புனித பேதுருவிடமிருந்து கேட்டறிந்திருக்கலாம்.

- எருது : நான் தான் லூக்கா நற்செய்தியின் அடையாளம். புனித லூக்கா ஒரு வரலாற்றாசிரியர், சித்திரக் கலைஞன், வைத்தியர். நற்செய்தியை எழுதிய ஒரே ஒரு பிற இனத்தவர் இவராவார். லூக்கா நற்செய்தியோடு மட்டுமல்லாது திருத்தூதர் பணி நூலையும் எழுதியுள்ளார். இது லூக்கா நற்செய்தியின் இரண்டாம் பகுதியாகும்

- கழுகு : நான் தான் யோவான் நற்செய்தியின் அடையாளம். யோவான் இயேசுவின் திருத்தூதராவார். இவரது சகோதரர் பெரிய யாக்கோபு. இவரும் இயேசுவின் திருத்தூதராவார். இயேசுவின் திருத்தூதர் ஆவதற்கு முன்னர் இவர்கள் இருவரும் மீனவர்கள். செபதேயு சலோமி இவ்விரு திருத்தூதரதும் பெற்றோராவர்.

**வீட்டுச் சூழல் :**

நம்பிக்கையில் வாழ்வதற்கு பிள்ளைகளைப் பழக்குங்கள்.

**தேர்ச்சி 2:0** : இறை வெளிப்பாட்டுக்குப் பதில் அளித்து நம்பிக்கையோடு வாழ்வர்.

**தேர்ச்சி மட்டம் 2.1** : படைப்பின் எழிலை அனுபவித்து இறைவனைப் புகழ்வர்.

**பாடவேளை** : 02

**கற்றற் பேறுகள்** :

- தொடக்க நூலிலுள்ள படைப்புக் கதைகள் தொடர்பான தகவல்களைத் திரட்டுவர்.
- கடவுள் இப்பிரபஞ்சத்தின் படைப்பாளர் என்பதை ஏற்றுக்கொள்வர்.
- திரட்டிய தகவல்களை ஆக்கங்களாக முன்வைப்பர்.
- மனித மாண்பின் மேன்மையை பாதுகாத்து அதற்கேற்ப வாழ்வர்.
- ஆண், பெண் வேறுபாடுகளுக்கு மதிப்பளிப்பர்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள்:**

**படிமுறை 1**

- பிரபஞ்சத்தினதும் மனிதனதும் தொடக்கம் தொடர்பாக விஞ்ஞான ரீதியாக கற்பிக்கப்படும் கருத்துக்களையும் விவாதங்களையும் ஆராய்ந்து, கீழ்க் காணப்படும் கருத்துக்கள் வெளிப்படும் வகையில் கலந்துரையாடுங்கள்.

  - பிரபஞ்சத்தினதும் மனிதனதும் தொடக்கம் தொடர்பாக விஞ்ஞானத்தில் கற்பிப்பது விவாதங்கள் மட்டுமேயாகும்.
  - விவாதங்கள் உண்மையாகவோ பொய்யாகவோ இருக்கலாம்.
  - அவை உண்மையாக இருப்பினும் பிரச்சினை இல்லை.
  - அவை உண்மையாக இருப்பினும் கடவுள் உலகைப் படைத்த விதத்தைப் பற்றியே கூறுகின்றது.
  - ஆனால் திருவிவிலியம் கூறுவது கடவுள் உலகைப் படைத்த விதத்தைப் பற்றியல்ல மாறாக கடவுள் உலகைப் படைத்தார் என்பதைப் பற்றியேயாகும்.
  - கடவுள் உலகை எவ்வாறு படைத்தார் என்பதை தேடிக்கண்டடைய மனிதனுக்கு அறிவைக் கொடுத்துள்ளார்.

(15 நிமிடங்கள்)

**படிமுறை 2**

- பொருத்தமான முறையில் மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து, தேவையான தரவிருத்தி உள்ளீடுகளை வழங்கி, குழுச் செயற்பாடுகளில் ஈடுபடுத்தி அவர்களின் செயற்பாடுகளை அவதானித்து தேவையான வழிகாட்டல்களை வழங்குங்கள்.

(35 நிமிடங்கள்)

**படிமுறை 3**

- ஒவ்வொரு குழுவினருக்கும் செயற்பாடுகளை முன்வைப்பதற்கான சந்தர்ப்பத்தை வழங்கி பின்வரும் கருத்துக்களின் அடிப்படையில் பாடத்தைச் சுருக்கமாக விளக்குங்கள்.

  - வரலாற்றுக்கு முற்பட்டகாலம் தொடர்பான அறிமுகம்.
    - வரலாற்றுக்கு முற்பட்ட காலத்துக்குரியது
      தொடக்க நூல் 1 - 11
    - வரலாற்றுக்கு முற்பட்ட காலம் எனப்படுவது ஆபிரகாமின் அழைப்பிற்கு முன் உள்ள காலமாகும்.
    - வரலாற்றுக் குறிப்புக்களை வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் அறிய முடியாது.
    - பிரபஞ்சத்தினதும் மனிதனதும் தொடக்கம் கடவுளே என்பதைக் கற்பிக்கும் உவமைக் கதையே அதில் அடங்கியுள்ளது.

- உவமைக் கதைகளின் நோக்கம் என்னவெனில் ஏதாவது ஒரு செய்தியினை வழங்கவேயன்றி காரணங்கள் நிகழ்ந்த விதத்தினை கற்பிப்பது அல்ல.
- இறைவன் இப்பிரபஞ்சத்தையும் மனிதனையும் படைத்தார் என்பது எக்காலத்துக்கும் உரிய உண்மையாவதோடு அவர் அவ்வாறு செய்தமையைத் தேடிக் கண்டடைய மனிதனுக்கு அறிவைக் கொடுத்துள்ளார்.

- படைப்புத் தொடர்பான இரு கதைகள் உள்ளன.
  - தொடக்கநூல் 2 / 4அ
  - தொடக்கநூல் 2 / 4ஆ - 25

- படைப்பு தொடர்பான முதலாவது கதை
  - குரு பாரம்பரியத்தைச் சேர்ந்ததாகும்.
  - குரு பாரம்பரியத்தில் ஓய்வுநாள் முக்கியமானதாகும்.
  - எனவே படைப்புக் கதை ஏழு நாட்களுக்கு வரையறை செய்யப்பட்டுள்ளது.
  - இதிலிருந்து தரப்படுகின்ற இறையியல் செய்தியாவது கடவுள் 6 நாட்களில் உலகைப் படைத்து 7வது நாள் ஓய்வு எடுத்ததைப் போன்று மனிதனும் 6 நாட்கள் வேலை செய்து 7வது நாள் ஓய்வெடுத்து இறைவனுக்காக அந்நாளைத் தூய்மையாகக் கழிக்க வேண்டும்.
  - கடவுள் தனது சாயலுக்கும் உருவுக்கும் ஏற்ப மனிதனை மட்டுமே படைத்துள்ளார்.
  - இறை சாயலின் பண்புகள்

    1. அறிவு 2. சுதந்திரம் 3. அழியா ஆன்மா
  - ஏனைய படைப்புக்களுக்கு இப்பண்புகள் இல்லை.
  - ஆகவே மனிதன் ஏனைய படைப்புகளை விட மேன்மையானவன்.

- படைப்புத் தொடர்பான இரண்டாவது கதை
  - யாவே பாரம்பரியத்தைச் சேர்ந்ததாகும்.
  - படைப்புக்களின் மேன்மையான படைப்பு மனிதனாவான்.
  - ஏனெனில் ஏனைய படைப்புக்களுக்கு உயிர் மூச்சு ஊதப்படவில்லை என்பதாகும்.
  - ஆணின் விலா எலும்பிலிருந்து பெண் படைக்கப்பட்டாள்.
  - கணவனும் மனைவியும் அன்பில் வாழ வேண்டும் என்பதை இது காட்டுகிறது.
  - இதற்கேற்ப இருவரும் ஒருவரை ஒருவர் மதித்து அன்பில் வாழ வேண்டும்.

- அன்றாட வாழ்வில் ஆண் பெண் வேறுபாடுகளுக்கு மதிப்பளித்து தமது மாண்பினை பாதுகாத்துக்கொள்ள வேண்டும்.
- படைப்புக்களில் உன்னத படைப்பென அதற்குப் பொருத்தமான நடத்தையை ஒழுங்கமைத்துக் கொள்ள வேண்டும்.

(30 நிமிடங்கள்)

**தரவிருத்தி உள்ளீடுகள்** :

- திருவிவிலியம்
- இணைப்பு 1

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

தேர்ச்சி மட்டத்திற்கேற்ப கற்றற் பேறுகள் எய்தப் பெற்ற அளவினை கணிப்பிடக் கூடிய வகையில் நியதிகளைத் தயாரிக்கும் சுதந்திரம் ஆசிரியருக்குள்ளது.

## இணைப்பு 1

- பாடநூலின் ஐந்தாம் பாடத்தை வாசித்து, உங்கள் குழு பெற்றுள்ள தலைப்புத் தொடர்பான ஆக்கமொன்றினை முன்வைப்பதற்கு ஆயத்தம் செய்யுங்கள்.

  - குழு 1: வரலாற்றுக்கு முற்பட்ட காலம்.
  - குழு 2: படைப்புத் தொடர்பான முதலாவது கதை.
  - குழு 3: படைப்புத் தொடர்பான இரண்டாவது கதை

**வீட்டுச் சூழல் :**

குடும்பத்தில் ஒருவருக்கொருவர் மதிப்பளியுங்கள்.

**தேர்ச்சி 2:0** : இறை வெளிப்பாட்டுக்குப் பதில் அளித்து நம்பிக்கையோடு வாழ்வர்.

**தேர்ச்சி மட்டம் 2.2** : நன்மை தீமையை விளங்கி பாவத்தின் அடிமைத்தனத்திலிருந்து மீட்புப் பெறுவர்.

**பாடவேளை** : 02

**கற்றற் பேறுகள்** :

- மனிதன் பாவத்தில் வீழ்ந்தமை தொடர்பான தகவல்களைத் திரட்டுவர்.
- மனச்சான்றுக்கு கீழ்ப்படிய வேண்டுமென்பதை ஏற்றுக் கொள்வர்
- திரட்டிய தகவல்களை ஆக்கங்களாக முன்வைப்பர்.
- ஆசைக்கு (சுவைக்கு) அடிமையாகாமல் சரியான தீர்மானம் எடுப்பர்.
- நேரிய வழியைக் காட்டுபவர்களுக்குக் கீழ்ப்படிவர்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள்:**

**படிமுறை 1**

- இணைப்பு 2ல் உள்ள உரையாடலை முற்பயிற்சியோடு வகுப்பில் முன்வைத்து, கீழ்க் காணப்படும் கருத்துக்களின் அடிப்படையில் கலந்துரையாடலொன்றை நடத்துங்கள்.

    - மாம்பழத்தைக் கண்டபோது பிள்ளைகள் தமது சுவையை பேசிய விதம் பின்வருமாறு.
        - '''வடிவான மாம்பழம்''
        - ''யாழ்ப்பாணத்து மாம்பழம்''
        - ''நல்ல சுவையாய் இருக்கும்''
        - ''சாப்பிடுவதற்கு முன்னமே சுவையைப் பற்றிப் பேசி முடித்து விட்டனர்.''
    - சுவை நன்மை தீமை இல்லாதது.
    - சுவையின் மட்டில் எடுக்கின்ற தீர்மானமே நன்மை அல்லது தீமையாகும்.
    - எனவே சுவைக்கு அடிமையாகி பிழையான தீர்மானம் எடுக்கக் கூடாது.

(15 நிமிடங்கள்)

**படிமுறை 2**

- பொருத்தமான முறையில் மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து, தேவையான தரவிருத்தி உள்ளீடுகளை வழங்கி, குழுச் செயற்பாடுகளில் ஈடுபடுத்தி அவர்களின் செயற்பாடுகளை அவதானித்துத் தேவையான வழிகாட்டல்களை வழங்குங்கள்.

(35 நிமிடங்கள்)

**படிமுறை 3**

- ஒவ்வொரு குழுவினருக்கும் செயற்பாடுகளை முன்வைப்பதற்கான சந்தர்ப்பத்தை வழங்கி பின்வரும் கருத்துக்களின் அடிப்டையில் பாடத்தைச் சுருக்கமாக விளக்குங்கள்.

    - ஆதாம் ஏவாள் (தொடக்க நூல் 3)
        - பெண் பாம்பினால் சோதிக்கப்படுகிறாள்.
        - பாம்பு மனிதனின் ஆசையை (சுவை) அடையாளப்படுத்துகிறது.
        - ஆசை (சுவை) பெண்ணைத் தூண்டுகிறது.
            - மரம் எவ்வளவு அழகானது (தொடக்க நூல் 3 : 6)
            - பழங்கள் எவ்வளவு சுவையானது (தொடக்க நூல் 3: 6)
            - அறிவு பெறுவதற்கு விரும்பத்தக்கது (தொடக்க நூல் 3: 6)
            - உண்பதற்கு முன்பே மரத்தின் சுவையை தீர்மானித்து விடல். அறிவு பெறுவது நல்லதென தீர்மானித்து விடல்.

- ஆசை (சுவை) அடிமையாகி பிழையான தீர்மானங்களை எடுக்கக் கூடாது.
- மனச்சான்றுக்குக் கீழ்ப்படிய வேண்டும்.

- நன்மை தீமையை விளங்கிக் கொள்ளும் திறன்.
- இறைவன் எம்மை அன்பு செய்யும் தந்தை.
- ஆகவே அவர் எம்மைப் பிழையான வழியில் செல்ல விடாது எச்சரிக்கிறார்.
- ஆதாம், ஏவாள், காயீன், ஆகியோரையும் இறைவன் எச்சரிக்கின்றார். (தொடக்கநூல் 2 : 17, 4 : 6 - 7 )
- இறைவன் எம்மையும் மனச்சான்று, பெற்றோர், பெரியவர்கள் ஆகியோர் வழியாக எச்சரிக்கின்றார்.
- ஆதாம், ஏவாள், காயீன் ஆகியோர் இறைவனின் எச்சரிக்கையை புறக்கணிக்கின்றனர். (தொடக்கநூல் 3 : 6, 4 : 8)
- எம்மை எப்பொழுதும் வழிநடத்துகின்ற பெற்றோர், ஆசிரியர்கள், சமயத்தலைவர்கள் ஆகியோருக்குக் கீழ்ப்படிய வேண்டும்.
- ஆதாம், ஏவாளிடமும், காயினடமும் வினவி இறைவன் அவர்களுக்குத் தண்டனை வழங்குகின்றார். (தொடக்கநூல் 3 : 11-19, 4)
- இறைவன் ஆதாம், ஏவாள், காயீன் ஆகியோருக்கு இரக்கம் காட்டுகிறார். (தொடக்கநூல் 3 : 15, 3 : 21, 4 : 15 )
- நோவா (தொடக்கநூல் 6 : 1-9 : 17)
  - வெள்ளப் பெருக்கிற்கான காரணம் : மனிதனின் பாவம்
  - வெள்ளப் பெருக்கின் நோக்கம் : பாவத்தை இவ்வுலகிலிருந்து அகற்றுதல்.
  - இறை இரக்கம் : புதிய படைப்பின் ஆரம்பமாக நோவாவின் குடும்பத்தையும் மிருகங்களின் பிரதிநிதிகளையும் காப்பாற்றுதல்.

(30 நிமிடங்கள்)

**தரவிருத்தி உள்ளீடுகள்** :

- திருவிவிலியம்
- இணைப்பு 1
- இணைப்பு 2

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

தேர்ச்சி மட்டத்திற்கேற்ப கற்றற் பேறுகள் எய்தப் பெற்ற அளவினை கணிப்பிடக் கூடிய வகையில் நியதிகளைத் தயாரிக்கும் சுதந்திரம் ஆசிரியருக்குள்ளது.

### இணைப்பு 1

- திருவிவிலியம் பாடநூலின் ஆறாம் பாடத்தை வாசித்து, நீங்கள் பெற்றுள்ள தலைப்புத் தொடர்பாக ஆக்கம் ஒன்றினை முன்வைப்பதற்கு ஆயத்தம் செய்யுங்கள்.
  - குழு 1: தொடக்கநூல் 3 இல் கிடைக்கும் செய்தி
  - குழு 2: தொடக்கநூல் 4 இல் கிடைக்கும் செய்தி
  - குழு 3: நோவா, வெள்ளப்பெருக்கு வழியாகக் கிடைக்கும் செய்தி.

### இணைப்பு 2

- தம்பி : அக்கா இங்கே பாருங்கோ நல்ல மாம்பழமொன்று

- அக்கா : ஆம் தானே! நாம் பாடசாலைக்குப் போயிருக்கையில், அம்மா சந்தைக்குச் சென்று வாங்கி வந்திருக்கலாம்.
- தம்பி : இவை யாழ்ப்பாணத்து மாம்பழமாக இருக்கலாம்.
- அக்கா : மல்கோவா மாம்பழமெனில் அதிக சுவையாக இருக்கும்.
- தம்பி : நாம் சாப்படுவோமா அக்கா?
- அக்கா : அம்மா இவற்றை எமக்காக வாங்கியிருக்கலாம்! நாம் சாப்பிடுவோம்.
- தம்பி : நல்ல சுவையாயிருக்குது அக்கா.
- அக்கா : அது தானே!
- தம்பி : மாழ்பழங்கள் எல்லாம் முடிந்து விட்டன.
- அக்கா : அப்பா வேலைக்குச் சென்றுள்ளார். அம்மாவும் ஒன்றைக் கூட சாப்பிட்டிருக்க மாட்டார்.
- தம்பி : இதோ அம்மா வருகிறார். இப்போ அம்மா எங்களை நல்லா ஏசுவார். நாம் ஒளிந்து கொள்வோம்.
- அம்மா : எங்கே இந்தப் பிள்ளைகள்? பாடசாலைக்குச் சென்று இன்னும் வரவில்லையோ?
- அக்கா : நாம் வந்துவிட்டோம் அம்மா!
- அம்மா : ஏன் அப்போ ஒளிந்திருந்தீர்கள்? ஆஹா இந்தப் பிள்ளைகள் எல்லா மாம்பழங்களையும் சாப்பிட்டு விட்டனர். அப்பாவுக்கும் எனக்கும் ஒன்றுகூட வைக்கவில்லையே!

**வீட்டுச் சூழல் :**

மனச் சான்றுக்கேற்ப செயலாற்றப் பிள்ளைகளைப் பழக்குங்கள்.

**தேர்ச்சி 2:0** : இறை வெளிப்பாட்டுக்குப் பதில் அளித்து நம்பிக்கையோடு வாழ்வர்.

**தேர்ச்சி மட்டம் 2.3** : அன்றாட வாழ்வில் இறை பராமரிப்பை அனுபவிப்பர்.

**பாடவேளை** : 02

**கற்றற் பேறுகள்** :

- விடுதலைப் பயணம் தொடர்பான தகவல்களைத் திரட்டுவர்.
- இறைபராமரிப்பைப் பெறுவதற்கு இறைவனில் நம்பிக்கை வைத்து வாழ வேண்டுமென்பதை ஏற்றுக்கொள்வர்.
- திரட்டிய தகவல்களை ஆக்கங்களாக முன்வைப்பர்.
- அன்றாட வாழ்வில் இறைபராமரிப்பை அனுபவிப்பர்.
- பிறர் துன்பப்படும்போது உதவி செய்வர்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள்:**

**படிமுறை 1**

- இணைப்பு 2ஐ செயற்படுத்தி, கீழ்க் காணப்படும் கருத்துக்களை வெளிக்கொணரக் கூடியதாகக் கலந்துரையாடலை நடத்துங்கள்.

  - ஆபிரகாம் இலிங்கன் பிறரின் விடுதலைக்காக தனது வாழ்வை அர்ப்பணம் செய்தார்.
  - இஸ்ரயேல் மக்களும் ஒரு காலத்தில் எகிப்தில் அடிமைத்தனத்துக்கு உள்ளாக்கப் பட்டிருந்தனர்.
  - இஸ்ரயேல் மக்களுக்கு அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பெற்றுக் கொடுப்பதற்காக இறைவன் மோசேயை அழைத்தார்.

(15 நிமிடங்கள்)

**படிமுறை 2**

- பொருத்தமான முறையில் மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து, தேவையான தரவிருத்தி உள்ளீடுகளை வழங்கி, குழுச் செயற்பாடுகளில் ஈடுபடுத்தி அவர்களின் செயற்பாடுகளை அவதானித்து தேவையான வழிகாட்டல்களை வழங்குங்கள்.

(30 நிமிடங்கள்)

**படிமுறை 3**

- ஒவ்வொரு குழுவினருக்கும் செயற்பாடுகளை முன்வைப்பதற்கான சந்தர்ப்பத்தை வழங்கி பின்வரும் கருத்துக்களின் அடிப்டையில் பாடத்தைச் சுருக்கமாக விளக்குங்கள்.

  - இஸ்ரயேல் மக்களின் அடிமைத்தனத்தின் பின்னணி. ( வி.ப 1 : 1-22)
  - இஸ்ரயேல் மக்கள் பெருகுவதை கட்டுப்படுத்துவதற்காக எடுக்கப்பட்ட முடிவுகள்.
    1. கடுமையான வேலைகளை ஒப்படைத்தல்.
    2. பிள்ளைப் பேற்றின்போதே ஆண் குழந்தைகளை கொலை செய்தல்.
    3. பிறக்கும் ஆண் குழந்தைகளை நைல் நதியில் எறிந்து விடுதல்.
  - மோசேயின் பிறப்பு (வி.ப 2 : 1-10)
  - மோசேயின் அழைப்பு (வி.ப 3 : 1-6)
  - இறைவன் முட்புதரின் நடுவே தீப்பிழம்பின் வழியாக மோசேக்குத் தோன்றினார்.
  - இறைவன் இஸ்ரயேல் மக்களை எகிப்திய அடிமைத்தனத்திலருந்து விடுவிப்பதற்காக மோசேயை அழைத்தார்.
  - எகிப்திய மக்களுக்கு அனுப்பப்பட்ட பெருந்துன்பங்கள் 10.
  - இஸ்ரயேல் மக்கள் செங்கடலைக் கடத்தல். (வி.ப 14 : 14-31)

- செங்கடலைக் கடத்தல் இயற்கையின் வழியாக இறைவன் தம்மை வெளிப்படுத்தல் என்பதாகும்.
- இறைவனுடைய வல்லமையை இஸ்ராயேல் மக்கள் கண்டுணர்ந்தனர்.
- பாலைவனத்தில் இறைபராமரிப்பு (வி.ப 15 : 22-25)
  மாராவில் தண்ணீர் கிடைத்தல்.
- பாலைவனத்தில் மன்னா, காடைகள் கிடைத்தல். மாசா, மெரிபா எனும் இடங்களில் தண்ணீர் கிடைத்தல். (வி.ப 17 : 1-7)
- பாலைவனத்தில் இறைவனின் பிரசன்னத்தையும் இறைவனின் பராமரிப்பையும் இஸ்ராயேல் மக்கள் அனுபவித்தனர்.
- இறைவனின் பராமரிப்பைப் பெற்றுக்கொள்ள நாமும் இறைவனில் ஆழமான நம்பிக்கையோடு வாழ வேண்டும்.
- எல்லாச் சந்தர்ப்பங்களிலும் இறைவன் எமக்குப் பாதுகாப்பளிக்கின்றார்.

(35 நிமிடங்கள்)

**தரவிருத்தி உள்ளீடுகள்** :

- திருவிவிலியம்
- பிரிஸ்டல் போட், டிமைன், பிளட்டினம்
- இணைப்பு 1, 2

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

தேர்ச்சி மட்டத்திற்கேற்ப கற்றற் பேறுகள் எய்தப் பெற்ற அளவினை கணிப்பிடக் கூடிய வகையில் நியதிகளைத் தயாரிக்கும் சுதந்திரம் ஆசிரியருக்குள்ளது.

**இணைப்பு 1**

- பாடநூலின் ஏழாவது பாடத்தை வாசித்து, நீங்கள் பெற்றுள்ள தலைப்புத் தொடர்பாக ஆக்கமொன்றினை முன்வைப்பதற்கு ஆயத்தம் செய்யுங்கள்.

  - குழு 1: மேசேயின் பிறப்பும் அழைப்பும்
  - குழு 2: இறைவன் எகிப்திய மக்களுக்கு அனுப்பிய 10 பெருந்துன்பங்களும், செங்கடலைக் கடத்தலும்
  - குழு 3: பாலைவனப் பயணத்தின்போது இறை பராமரிப்பு

**இணைப்பு 2**

- ஆபிரகாம் இலிங்கனின் கதையை முற்பயிற்சியோடு கதையாக ஒரு மாணவன் வகுப்பில் முன்வைக்கும்படி செய்யுங்கள்.

ஆபிரகாம் இலிங்கன்

அமெரிக்க ஐக்கிய நாட்டில் இருந்த ஜனாதிபதியான இவர் மிகவும் பிரபல்யமானவர். இவர் உலக வரலாற்றையே மாற்றியமைத்தவராவார்.

இவர் ஜனாதிபதியாக தேர்தலுக்குப் போட்டியிடும் போதே அந்நாட்டில் அடிமைவேலை வேரூன்றியிருந்தது. அனேக நாடுகளில் அடிமைவேலை நிலவியது. அடிமை வேலை செய்பவன் தனது வாழ்நாளெல்லாம் தனது எசமானுக்கு வேதனம் (சம்பளம்) இல்லாமல் வேலை செய்ய வேண்டும் என்பதே அக்காலச் சட்டமாக இருந்தது. இவ்வாறான மிலேச்ச தனமான அடிமை வேலையை இலிங்கன் எதிர்த்து நின்றார்.

இவர் அமெரிக்காவின் ஜனாதிபதியாக வந்தபின்னர் அடிமை வேலையை அந்நாட்டிலிருந்து நீக்குவதற்கு சட்டங்களை ஏகமனதாய் நிறைவேற்றினார். பின்னர் முழு உலகிலேயும் அடிமைவேலை நீக்கப்பட்டது. இவ்வாறான உன்னத செயலினாலேயே இவர் பகைவனொருவனின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி மரணமடைந்தார். எனினும் மனித வரலாற்றில் இவரது உன்னதமான பெயர் இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கிறது.

**வீட்டுச் சூழல் :**

பிறர் துன்பங்களில் உதவிசெய்யப் பிள்ளைகளைப் பழக்குங்கள்.

**தேர்ச்சி 2:0** : இறை வெளிப்பாட்டுக்குப் பதில் அளித்து நம்பிக்கையோடு வாழ்வர்.

**தேர்ச்சி மட்டம் 2.4** : மீட்பின் செயற்பாட்டை விளக்கி வாக்குறுதிகளுக்கு பிரமாணிக்கமாக நடந்து கொள்வர்.

**பாடவேளை** : 02

**கற்றற் பேறுகள்** :

- இறைவன் மனிதனோடு செய்துகொண்ட உடன்படிக்கை தொடர்பான தகவல்களைத் திரட்டுவர்.
- இறைகட்டளைகளை கடைப்பிடிக்க வேண்டுமென்பதை ஏற்றுக்கொள்வர்.
- திரட்டிய தகவல்களை ஆக்கங்களாக முன்வைப்பர்.
- ஒழுக்கமுள்ளவர்களாக வாழ்வர்.
- பிறருக்குக் கொடுத்த வாக்கை நிறைவேற்றுவர்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள்:**

**படிமுறை 1**

- இக்கால உடன்படிக்கை ஒன்றைப் பற்றிய பத்திரிக்கைச் செய்தியொன்றை வாசித்து, கீழ்க்காணப்படும் கருத்துக்களை வெளிக்கொணரும்படி கலந்துரையாடலை நடத்துங்கள்.

    - இரு குழுக்களுக்கிடையே அல்லது இரு நபர்களுக்கிடையே ஒருவருக்கொருவர் கொடுக்கும் ஒப்பந்தமே உடன்படிக்கையாகும்.
    - சீனாய் உடன்படிக்கை இறைவனுக்கும் மனிதனுக்குமிடையிலான உடன்படிக்கையாகும்.
    - இது ஏனைய உடன்படிக்கைகளை விட விசேடமானதும் அதற்கு பரம்பரையாய் வரும் உறுதியையும் காணலாம்.

        1. உடன்படிக்கையில் இருதரப்பினர் இருப்பினும் எப்போதும் முதன்மை வகிப்பவர் இறைவனேயாவார்.
        2. இறைவனுக்கும் மனிதனுக்கும் இடையில் பெரிய வேறுபாடு இருப்பினும் இறைவன் அதனை அனுமதிக்கின்றார்.

(15 நிமிடங்கள்)

**படிமுறை 2**

- பொருத்தமான முறையில் மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து, தேவையான தரவிருத்தி உள்ளீடுகளை வழங்கி, குழுச் செயற்பாடுகளில் ஈடுபடுத்தி அவர்களின் செயற்பாடுகளை அவதானித்துத் தேவையான வழிகாட்டல்களை வழங்குங்கள்.

(30 நிமிடங்கள்)

**படிமுறை 3**

- ஒவ்வொரு குழுவினருக்கும் செயற்பாடுகளை முன்வைப்பதற்கான சந்தர்ப்பத்தை வழங்கி பின்வரும் கருத்துக்களின் அடிப்படையில் பாடத்தைச் சுருக்கமாக விளக்குங்கள்.

    - ஆதாமோடு செய்த உடன்படிக்கை (தொ.நூ 3 : 15)
        - இறைவனுக்குக் கீழ்ப்படியாத மனிதன் இறை உறவை இழந்தான்.
        - மனிதன் மேல் இரக்கம் காட்டிய இறைவன் அவனுக்கு மீட்பின் உடன்படிக்கையை கொடுத்தார்.
        - பாவத்தின் அடிமைத்தனத்திலிருந்து மீட்டெடுப்பதற்காக மீட்பரொருவரை அனுப்புவதாக உடன்படிக்கை செய்தார்.

- நோவாவோடு செய்த உடன்படிக்கையும் அதன் பண்புகளும் (தொ.நூ 9 : 8-11)
    - பாவம் பெருகிக்கொண்டு சென்றதால் அதனை அகற்றுவதற்காக வெள்ளப்பெருக்கு அனுப்பப்பட்டது.
    - இதன் பின்னர் ஒருநாளும் வெள்ளப்பெருக்கினால் உலகை அழிக்காதவாறு உடன்படிக்கை செய்யப்பட்டது.
    - உடன்படிக்கையின் அடையாளம் **வானவில்** ஆகும்.

- ஆபிரகாமோடு செய்த உடன்படிக்கையும் அதன் அடையாளமும் (தொ.நூ 15 : 1-21, 17 : 1-14)
    - உடன்படிக்கையின் முக்கிய காரணிகள் இரண்டு.
        1. எண்ணிக்கையற்ற வழிமரபினர் (தொ.நூ 15 : 5, 17 : 6)
        2. என்றும் உள்ள உரிமைச் சொத்தான நாடு (வி.ப 15 : 21, 17 : 18)
    - உடன்படிக்கையின் அடையாளம் **விருத்தசேதனம்** தொ.நூ 17 : 10-14)

- சீனாய் உடன்படிக்கையும் 10 கட்டளைகளும் (விடுதலைப்பயணம் 20ஆம் அதிகாரம்)
    - இஸ்ராயேல் வரலாற்றிலேயே மிகவும் முக்கியமாக விளங்குவது சீனாய் உடன்படிக்கையாகும்.
    - சீனாய் உடன்படிக்கையின் சுருக்கம் 10 கட்டளைகளின் வழியாகக் காட்டப்பட்டுள்ளது.
    - இது எக்காலத்துக்கும் உரிய சட்டக் கோவையாகும்.
    - 10 கட்டளைகளுக்கேற்ப நாம் வாழ வேண்டும்.
    - திருமுழுக்கின் வழியாக நாம் உடன்படிக்கை வாழ்வுக்குள்ளாக்கப்படுகிறோம்.
    - பிறருக்குக் கொடுக்கும் வாக்குறுதிகளுக்கு பிரமாணிக்கமாக வாழ வேண்டும்.
    - பிறருக்குக் கொடுத்த வாக்கை நிறைவேற்ற வேண்டும்.

(35 நிமிடங்கள்)

**தரவிருத்தி உள்ளீடுகள்** :

- திருவிவிலியம்
- பிரிஸ்டல் போட், டிமைன், பிளட்டினம்
- இணைப்பு 1, 2
- காலத்துக்குரிய உடன்படிக்கை பிரசுரிக்கப்பட்ட பத்திரிகைச் செய்தி

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

தேர்ச்சி மட்டத்திற்கேற்ப கற்றற் பேறுகள் எய்தப் பெற்ற அளவினை கணிப்பிடக் கூடிய வகையில் நியதிகளைத் தயாரிக்கும் சுதந்திரம் ஆசிரியருக்குள்ளது.

**இணைப்பு 1**

- பாடநூலின் எட்டாவது பாடத்தை வாசித்து, நீங்கள் பெற்றுள்ள உடன்படிக்கை தொடர்பான ஆக்கமொன்றினை முன்வைப்பதற்கு ஆயத்தம் செய்யுங்கள்.

    - குழு 1: இறைவன் ஆதாமோடு செய்த உடன்படிக்கை.
    - குழு 2: இறைவன் நோவாவோடு செய்த உடன்படிக்கை.
    - குழு 3: இறைவன் ஆபிரகாமோடு செய்த உடன்படிக்கை.
    - குழு 4: சீனாய் உடன்படிக்கை

**வீட்டுச் சூழல் :**

ஒழுக்க நெறிகளைக் கடைப்பிடிக்கப் பிள்ளைகளை ஊக்கப்படுத்துங்கள்.

**தேர்ச்சி 2:0** : இறை வெளிப்பாட்டுக்குப் பதில் அளித்து நம்பிக்கையோடு வாழ்வர்.

**தேர்ச்சி மட்டம் 2.5** : திருமுழுக்கு யோவானைப் பின்பற்றி இன்றைய சமூகத்தில் இறைவாக்கினராகச் செயற்படுவர்.

**பாடவேளை** : 02

**கற்றற் பேறுகள்** :

- திருமுழுக்கு யோவான் தொடர்பான தகவல்களைத் திரட்டுவர்.
- திருமுழுக்கு யோவானின் போதனைகளுக்கேற்ப வாழ வேண்டும் என்பதை ஏற்றுக்கொள்வர்.
- திரட்டிய தகவல்களை ஆக்கங்களாக முன்வைப்பர்.
- சமூகத்திலே ஓர் இறைவாக்கினராகச் செயலாற்றுவர்.
- தன்னிடமுள்ளதைப் பிறரோடு பகிர்ந்து கொள்வர்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள்:**

**படிமுறை 1**

- திருமுழுக்கு யோவானின் ஒரு படத்தை வகுப்பில் காட்சிப்படுத்தி கீழ்க் காணப்படும் கருத்துக்களின் அடிப்படையில் கலந்துரையாடலை நடத்துங்கள்.

  - திருமுழுக்கு யோவான் யோர்தான் பாலைவனத்தில் தவம் செய்து எளிமையாக வாழ்ந்து வந்தார்.
  - இயேசுவின் முன்னோடியாக வழியை ஆயத்தம் செய்தார்.
  - மனமாற்றம் அடைந்து வாழ்வை மாற்றியமைத்து வாழும்படி மக்களைத் திருமுழுக்கு யோவான் அழைத்தார்.
  - திருமுழுக்கு யோவான் பழைய ஏற்பாட்டையும் புதிய ஏற்பாட்டையும் இணைக்கின்ற இறைவாக்கினராவார்.

(10 நிமிடங்கள்)

**படிமுறை 2**

- பொருத்தமான முறையில் மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து, தேவையான தரவிருத்தி உள்ளீடுகளை வழங்கி, குழுச் செயற்பாடுகளில் ஈடுபடுத்தி அவர்களின் செயற்பாடுகளை அவதானித்து தேவையான வழிகாட்டல்களை வழங்குங்கள்.

(35 நிமிடங்கள்)

**படிமுறை 3**

- ஒவ்வொரு குழுவினருக்கும் செயற்பாடுகளை முன்வைப்பதற்கான சந்தர்ப்பத்தை வழங்கி பின்வரும் கருத்துக்களின் அடிப்டையில் பாடத்தைச் சுருக்கமாக விளக்குங்கள்.

  - திருமுழுக்கு யோவானின் பிறப்பின் அறிவிப்பு (லூக் 1 : 5-25)
  - மனிதனால் செய்ய இயலாததை இறைவன் செய்ய வல்லவர்.
  - திருமுழுக்கு யோவானின் பிறப்பு (லூக்கா 2 : 57-66)
    - தாயின் வயிற்றிலிருக்கும்போதே சென்ம பாவம் நீங்கியமை திருமுழுக்கு யோவானின் பிறப்பின் விசேட தன்மையாகும்.
  - திருமுழுக்கு யோவானின் போதனை (லூக் 3 : 1-18)
    - திருமுழுக்கு யோவான் மக்கள் கூட்டத்தினருக்குக் கூறியது.
      - மனமாற்றத்தின் மூலம் வாழ்வில் உண்மையான மாற்றத்தினை ஏற்படுத்த வேண்டும்.

- பொதுமக்களுக்குக் கூறிய செய்தி (லூக்கா 3 : 11)
    - பகிர்ந்து வாழவேண்டுமெனக் கூறினார்.
- வரி தண்டுவோருக்குக் கூறிய செய்தி (லூக் 3 : 13)
    - வரிதண்டும் போது நீதி நியாயத்தோடு நடந்து கொள்ள வேண்டுமெனக் கூறினார்.
- படைவீரர்களுக்குக் கூறிய செய்தி (லூக் 3 : 14)
    - உங்கள் ஊதியமே போதுமென நினைத்துப் பணியாற்றுவது முக்கியமாகும். மனித நேயம், பொது நன்மை ஆகியவற்றுக்கு முதலிடம் வழங்க வேண்டுமெனக் கூறினார்.

- திருமுழுக்கு யோவானின் இறப்பு (மத் 14: 1-12)
    - அவர் ஏரோது மன்னனின் தவறான வாழ்வினைப் பகிரங்கமாகக் கூறினார்.
    - அவர் எந்தவித ஏற்றத் தாழ்வும் பார்க்காமல் இறைவனுடைய நீதியையும் உண்மையையும் வெளிப்படுத்தினார்.
    - இறக்க நேரிடினும் ஒருவர் தமது இறைவாக்குப் பணிக்கு சான்றுபகர வேண்டும்.
    - திருமுழுக்கின் வழியாக நாம் பெற்ற இறைவாக்குப் பணிக்கு சான்று பகர வேண்டும்.

(35 நிமிடங்கள்)

**தரவிருத்தி உள்ளீடுகள்** :

- திருவிவிலியம் அல்லது புதிய ஏற்பாடு
- பிரிஸ்டல் போட், டிமைன், பிளட்டினம்
- இணைப்பு 1

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

தேர்ச்சி மட்டத்திற்கேற்ப கற்றற் பேறுகள் எய்தப் பெற்ற அளவினை கணிப்பிடக் கூடிய வகையில் நியதிகளைத் தயாரிக்கும் சுதந்திரம் ஆசிரியருக்குள்ளது.

**இணைப்பு 1**

- குழு 1: (லூக்கா 1 : 5-25) ஐ வாசித்து திருமுழுக்கு யோவானின் பிறப்பினை அறிவித்த நிகழ்வினை பாத்திரமேற்று நடிப்பதன் வழியாக முன்வைக்கவும்.

- குழு 2: (லூக்கா 2 : 57-66) ஐ வாசித்து திருமுழுக்கு யோவானின் பிறப்பை ஆக்கமாக முன்வைக்கவும்.
- குழு 2: (லூக்கா 3 : 1-20) ஐ வாசித்து திருமுழுக்கு யோவானின் போதனை இன்றைய சமூகத்துக்குத் தருகின்ற செய்தியை ஆக்கமாக முன்வைக்கவும்.
- குழு 4: (லூக்கா 14 : 1-12) ஐ வாசித்து உண்மைக்காக உயிரைப் பலியாக்கிய திருமுழுக்கு யோவான் வாழ்விலிருந்து நீங்கள் பெறுகின்ற முன்மாதிரிகைகளை ஆக்கமாக முன்வைக்கவும்.

**வீட்டுச் சூழல்**

நீதியாக வாழ்வதற்குப் பிள்ளைகளைப் பழக்குங்கள்.

**தேர்ச்சி 2:0** : இறை வெளிப்பாட்டுக்கு பதில் அளித்து நம்பிக்கையோடு வாழ்வர்.

**தேர்ச்சி மட்டம் 2.6** : பங்கில் பல்வேறு மறைதூதுப் பணிகளில் ஆர்வத்தோடு செயற்படுவர்.

**பாடவேளை** : 02

**கற்றற் பேறுகள்** :

- இயேசுவின் தூதுப்பணி தொடர்பான கருத்துக்களைத் திரட்டுவர்.
- மக்கள் பணிக்காக எமது வாழ்வை அர்ப்பணம் செய்ய வேண்டுமென்பதை ஏற்றுக்கொள்வர்.
- திரட்டிய தகவல்களை ஆக்கங்களாக முன்வைப்பர்.
- மறைத்தூதுப் பணிகளில் ஈடுபடுவர்.
- பங்கிலுள்ள மறைதூதுப் பணிகளுக்கு ஒத்துழைப்பு வழங்குவர்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள்:**

**படிமுறை 1**

- இணைப்பு 2ஐ செயற்படச் செய்து, கீழக் காணப்படும் கருத்துக்களை வெளிக்கொணரும்படி கலந்துரையாடலை நடத்துங்கள்.

  - மேதகு பேராயர் ஒஸ்கார் றொமேறோ தென்அமெரிக்காவில் எல்சல்வடோர் எனும் பெயருடைய நாட்டில் இடம்பெற்ற ஊழல், ஒழுங்கீனங்கள், பயங்கரம், அநியாயங்கள் ஆகியன பற்றிப் பகிரங்கமாக விமர்சனம் செய்தார்.
  - இவ்வுன்னத பணிக்காகவே அவர் பகைவனொருவனின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி மரணமடைந்தார்.
  - பிறர் விடுதலைக்காக அவர் தனது வாழ்வை அர்ப்பணம் செய்தார்.
  - இவர் தனது நாட்டு மக்களுக்காகவே தன்னுயிரை அர்ப்பணித்தார்.
  - ஆனால் முழு மனித சந்ததியும் மீட்பைப் பெறுவதற்காக வருகை தந்த இயேசுவினது தூதுப் பணியைப் பார்ப்போம்.

(15 நிமிடங்கள்)

**படிமுறை 2**

- பொருத்தமான முறையில் மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து, தேவையான தரவிருத்தி உள்ளீடுகளை வழங்கி, குழுச் செயற்பாடுகளில் ஈடுபடுத்தி அவர்களின் செயற்பாடுகளை அவதானித்துத் தேவையான வழிகாட்டல்களை வழங்குங்கள்.

(30 நிமிடங்கள்)

**படிமுறை 3**

- ஒவ்வொரு குழுவினருக்கும் செயற்பாடுகளை முன்வைப்பதற்கான சந்தர்ப்பத்தை வழங்கி பின்வரும் கருத்துக்களின் அடிப்படையில் பாடத்தைச் சுருக்கமாக விளக்குங்கள்.

  - இயேசுவின் திருமுழுக்கு (லூக்கா 3 : 21-22)
  - இயேசு சோதிக்கப்படுதல் (லூக்கா 4 : 1-13)
    - தனது அதிகாரத்தையும் ஆற்றல்களையும் பிறருக்காகப் பயன்படுத்த வேண்டும்.
    - உணவினால் ஊட்டம் பெறுகின்ற உடல் ரீதியான வாழ்வை விட இறைவார்த்தையால் ஊட்டம் பெறுகின்ற நிலைவாழ்வு உன்னதமானதாகும்.
    - எம் வாழ்வில் இறைவனுக்குரிய இடத்தை, செல்வத்துக்கோ, அதிகாரத்துக்கோ, புகழுக்கோ கொடுக்கக் கூடாது.
    - நசரேத்தில் இயேசுவின் போதனை. (லூக்கா 4 : 16-21)
      - நசரேத்தில் இயேசுவின்போதனையின்போது தமது தூதுப்பணியின் நோக்கத்தை விளக்கினார்.

- புதுமைகளின் வகைகள்.
    - புதுமைகள் இறைவனை வெளிப்படுத்துவதோடு அவருடைய வல்லமையையும் எடுத்துக்காட்டும் அருஞ்செயலாகும்.
    - புதுமைகளை நான்கு முக்கிய வகைகளாகப் பிரித்து இனங்காணக் கூடியதாயுள்ளன.

    1. நோயுற்றோரைக் குணப்படுத்தல் தொடர்பான புதுமைகள்.
    2. பேய்களை விரட்டுதல் தொடர்பான புதுமைகள்.
    3. இறந்தோரை உயிர்ப்பித்தல் தொடர்பான புதுமைகள்.
    4. இயற்கையைக் கட்டுப்படுத்தல் தொடர்பான புதுமைகள்.

- நம்பிக்கையோடு பதில் அளிக்கையில் எமது வாழ்விலும் புதுமைகள் இடம்பெறுகின்றன.

- 72 சீடர்களின் மறை தூதுப்பணி (லூக்கா 10 : 1-12)
    - இயேசு அவர்களுக்கு அறிவுரையும், எச்சரிக்கையும், ஆலோசனையும் கூறுகிறார்.
    - இயேசு சீடர்களிடம் ஒப்படைத்த தூதுப்பணி தொடர்பான பொறுப்புகள் இன்று திருச்சபையின் வழியாக எம்மிடமும் ஒப்படைக்கப்பட்டுள்ளது.
    - பொதுநிலை அப்போஸ்தலிக்க பணிகளுக்காக முன் வர வேண்டும்.
    - நாம் சவால்களை எதிர் கொள்ளும்போது நிலைதளராமல் வெற்றி பெறுவதற்கு இயேசுவின் முன்மாதிரியைப் பின்பற்ற வேண்டும்.

(35 நிமிடங்கள்)

**தரவிருத்தி உள்ளீடுகள்** :

- திருவிவிலியம்
- பிரிஸ்டல் போட், டிமைன், பிளட்டினம்
- இணைப்பு 1, 2

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

தேர்ச்சி மட்டத்திற்கேற்ப கற்றற் பேறுகள் எய்தப் பெற்ற அளவினை கணிப்பிடக் கூடிய வகையில் நியதிகளைத் தயாரிக்கும் சுதந்திரம் ஆசிரியருக்குள்ளது.

**இணைப்பு 1**

- குழு 1: (லூக்கா 3 : 21-22, லூக்கா 4 : 1-13) ஐ வாசித்து திருமுழுக்குப் பெற்ற இயேசு சோதனைகளை வெற்றியீட்டியதன் வழியாக நீங்கள் பெற்றுக் கொள்ளும் முன்மாதிரிகைகளை ஆக்கமாக முன்வையுங்கள்..

- குழு 2: (லூக்கா 4 : 16-20) ஐ வாசித்து இயேசு இவ்வலகிற்கு வருகை தந்த நோக்கத்தை எழுதி, ஏழைகளுக்கும், துன்பப்படுவோருக்கும், நோயாளிகளுக்கும் புதிய உலகு ஒன்றை உருவாக்குவதற்கு நீங்கள் செய்யக் கூடியவற்றை பட்டியல் படுத்துங்கள்.

- குழு 2: பாடநூலின் 10வது பாடத்தை வாசித்து இயேசு செய்த நான்கு வகைப் புதுமைகளையும் போஸ்டர் ஒன்றின் வழியாக ஆக்கமாகச் செய்யுங்கள்.

- குழு 4: (லூக்கா 10 : 1-12) ஐ வாசித்து மறைத்தூதுப் பணியில் ஈடுபட்டுள்ளோர் பின்பற்ற வேண்டிய இயேசுவின் அறிவுரைகளை ஆக்கமாக முன்வையுங்கள்.

## இணைப்பு 2

### மேதகு பேராயர் ஒஸ்கார் றொமேறோ

தென் அமெரிக்காவின் எல்சல்வடோர் நாட்டிலே மக்கள் 10 வருடங்களாக யுத்தத்தினால் துன்பத்துக்குள்ளாகியிருந்தார்கள். 1977 பெப்ரவரி 22 இல் பேராயராக ஒஸ்கார் றொமேறோ நியமனம் பெற்றார். இவரில் ஆழ்ந்த பற்றுறுதியும், அன்பு, சுயகட்டுப்பாட்டொழுங்கு, தாழ்மை, நேர்மை, உண்மை போன்ற பண்புகள் மிளிர்ந்தன. மக்களின் ஆன்மீக வளர்ச்சிக்காகத் தன்னை அர்ப்பணித்தார். அவர் நாட்டில் நிலவிய ஊழல், ஒழுங்கீனங்கள், பயங்கரம், அநியாயங்கள் என்பன பற்றிப் பகிரங்கமாக விமர்சனம் செய்தார். சமூக அநீதிகளுக்கு எதிராக குரல் செய்த மக்கள் அவரைச் சுற்றி வட்டமிட்டனர். 1980 மார்ச் மாதம் 24ஆம் திகதி வைத்தியசாலையொன்றில் இருந்த சிறு ஆலயத்தில் மறையுரையின் இறுதியில் ‘‘நாம் நம்பிக்கையோடும், எதிர் நோக்கோடும் ஒன்று சேர்வோம்’’ எனும் வார்த்தைகளைக் கூறி முடிக்கையில் எதிரியின் துப்பாக்கிச் சூடு ஆயரின் இதயத்தை ஊடுவிச் சென்றது.

(இதனை கதையாக மாணவர்களுக்கு முன் வைக்கவும்)

**வீட்டுச் சூழல்**

பங்கில் உள்ள மறைதூதுப் பணிகளில் பிள்ளைகளை ஈடுபடுத்துங்கள்

**தேர்ச்சி 2:0** : இறை வெளிப்பாட்டுக்குப் பதில் அளித்து நம்பிக்கையோடு வாழ்வர்.

**தேர்ச்சி மட்டம் 2.7** : இறையாட்சியின் மதிப்பீடுகளினூடாக தமது வாழ்வை ஒளிமயமாக்கிக் கொள்வர்.

**பாடவேளை** : 02

**கற்றற் பேறுகள்** :

- இறையாட்சி தொடர்பான தகவல்களைத் திரட்டுவர்.
- இலங்கைக்குரிய விழுமியங்களை வாழ வைக்க வேண்டுமென ஏற்றுக்கொள்வர்.
- திரட்டிய தகவல்களை ஆக்கங்களாக முன்வைப்பர்.
- இறையாட்சியின் மதிப்பீடுகளை வாழ வைப்பர்.
- எல்லோரோடும் நல்ல மனித உறவினைப் பேணுவர்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள்:**

**படிமுறை 1**

- இணைப்பு 2ஐ செயற்படுத்தி, கீழ்க் காணப்படும் கருத்துக்களை வெளிக்கொணரக் கூடியதாக கலந்துரையாடலை நடத்துங்கள்.

  - இறையாட்சியின் அங்கத்தவர்கள் இவ்வுலக மதிப்பீடுகளையும் கடந்து செல்லும் சமய நெறிகளில் முழுமையடைய வேண்டும்.
  - இறையாட்சிக்கு தீங்கு விளைவிக்கும் செயல்களிலிருந்து நாம் தூர விலகி நிற்க வேண்டும்.
  - இறையாட்சியின் மதிப்பீடுகளைச் சமூகத்தில் வாழ வைக்க வேண்டும்.
  - கிறிஸ்து இறையாட்சியை வெளிப்படுத்தினார்.

(15 நிமிடங்கள்)

**படிமுறை 2**

- பொருத்தமான முறையில் மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து, தேவையான தரவிருத்தி உள்ளீடுகளை வழங்கி, குழுச் செயற்பாடுகளில் ஈடுபடுத்தி அவர்களின் செயற்பாடுகளை அவதானித்து தேவையான வழிகாட்டல்களை வழங்குங்கள்.

(30 நிமிடங்கள்)

**படிமுறை 3**

- ஒவ்வொரு குழுவினருக்கும் செயற்பாடுகளை முன்வைப்பதற்கான சந்தர்ப்பத்தை வழங்கி பின்வரும் கருத்துக்களின் அடிப்டையில் பாடத்தைச் சுருக்கமாக விளக்குங்கள்.

  - இறையாட்சி
  - இறையாட்சியின் மதிப்பீடுகள் உவமைகளின் வழியாக விளக்கப்பட்டுள்ளன.(மத்தேயு13)
  - மலைப் பொழிவின் வழியாக இறையாட்சியின் மதிப்பீடுகள் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன. (மத் 5-7 அதிகாரங்கள்)

    உ + ம் : எட்டுப் பேறுகள் (மத் 5 : 1-12)
  - இறையாட்சி இவ்வுலகில் உதயமாகியுள்ளது என இயேசு புதுமைகளின் வழியாக உறுதிப்படுத்தியுள்ளார். (லூக் 11 : 20)
  - இலங்கையின் பண்பாட்டு கலாச்சார விழுமியங்களினூடாகவும் இறையாட்சியின் மதிப்பீடுகள் வெளிக் கொணரப்பட்டுள்ளன.
  - மக்களாகிய நாம் விழுமியங்களில் வளர்வதற்கு எட்டுப்பேறுகளின் மூலம் இயேசு வழிகாட்டியுள்ளார்.
  - சமூகத்துள் விழுமியங்களைப் பயிற்றுவிப்பதால் இறையாட்சியில் ஈடுபட முடியும்.

- இலங்கைச் சமூகத்தில் உள்ள விழுமியங்களை வாழவைப்பதற்குச் செயற்பட வேண்டும்.
- இலங்கையில் வீழ்ச்சியடைந்துள்ள ஒழுக்க விழுமியங்களைப் பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும்.
- இறையாட்சியை உரிமையாக்கிக் கொள்வதற்கு நாம் அனைவரும் அழைக்கப்பட்டுள்ளோம்.
- இறையாட்சியை சொந்தமாக்கிக் கொள்வதனால் உன்னதமான பயன் கிடைக்கும்.

(35 நிமிடங்கள்)

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- திருவிவிலியம்
- பிரிஸ்டல் போட், டிமைன், பிளட்டினம்
- இணைப்பு 1, 2

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

தேர்ச்சி மட்டத்திற்கேற்ப கற்றற் பேறுகள் எய்தப் பெற்ற அளவினை கணிப்பிடக் கூடிய வகையில் நியதிகளைத் தயாரிக்கும் சுதந்திரம் ஆசிரியருக்குள்ளது.

**இணைப்பு 1**

- பாடநூலின் பதினொராவது பாடத்தை வாசித்து, இறையாட்சி தொடர்பான ஆக்கமொன்றினைத் தயாரிப்பதற்காக ஆயத்தம் செய்யுங்கள்.

    - ''பிரபல்யமாகுங்கள்'' ''பேராசை, ஆசையிலிருந்து தப்புங்கள்''
    - ''அமைதியைப் பரப்புங்கள்'' ''சட்டத்தை உங்கள் நன்மைக்காக பயன்படுத்துங்கள்''
    - ''மரியாதையைக் காப்பாற்றுங்கள்'' ''எதிரிகளைக் கட்டுப்படுத்துங்கள்''
    - ''தாழ்மையாயிருங்கள்'' ''உண்டு, குடித்து மகிழுங்கள்''
    - ''தானம் செய்யுங்கள்'' ''உங்கள் நற்பெயரைப் பற்றி எப்போதும் சிந்தியுங்கள்''
    - ''நியாயத்துக்கு முதலிடம் கொடுங்கள்'' ''பிறருக்குத் தீர்ப்பு இடாதீர்கள்''
    - ''உண்மைக்குச் சான்று பகருங்கள்'' ''அநீதிக்குத் தலை சாயுங்கள்''
    - ''தீயனவற்றை உள்ளத்தில் நினையுங்கள்'' ''நியாயத்துக்கு மதிப்பளியுங்கள்''
    - ''தினமும் செபியுங்கள்'' ''பகைவருக்கு விரோதம் காட்டுங்கள்''
    - ''இரக்கம் காட்டுங்கள்'' ''செல்வத்தைத் திரட்டுங்கள்''

- மேற்கூறப்பட்டுள்ள கூற்றுக்களை டிமைன் தாளில் பெரிய எழுத்தில் எழுதி, அதனை வகுப்பில் மாணவர்களுக்குக் காட்சிப்படுத்துங்கள். அதிலுள்ள இறையாட்சியின் மதிப்பீடுகளையும் இவ்வுலக மதிப்பீடுகளையும் வெவ்வேறாகத் தேடி மாணவர்களை கரும்பலகையில் குறிக்கும் படி செய்யுங்கள். இறையாட்சியின் மதிப்பீடுகளின் பெறுமதியை மாணவருக்கு விளக்குங்கள்.

**வீட்டுச் சூழல்**

கிறிஸ்தவ விழுமியங்களின்படி வாழ்வதற்குப் பிள்ளைகளைப் பழக்குங்கள்.

**தேர்ச்சி 3:0** : அருளடையாளங்கள் வழியாக கிறிஸ்துவுடன் இணைந்து பெற்றுக் கொண்ட புதுவாழ்வுக்குச் சான்று பகர்வர்.

**தேர்ச்சி மட்டம் 3.1** : அருளடையாளங்கள் வழியாக முதிர்ச்சியடைந்த கிறிஸ்தவராகி முன்மாதிரிகையாக வாழ்வர்.

**பாடவேளை** : 02

**கற்றற் பேறுகள்** :

- திருமுழுக்கு, உறுதிப்பூசுதல் தொடர்பான தகவல்களைத் திரட்டுவர்.
- முதிர்ச்சி பெற்ற கிறிஸ்தவராக முன்மாதிரிகையாக வாழ்வதற்கு விருப்பத்தைத் தெரிவிப்பர்.
- திரட்டிய தகவல்களை ஆக்கங்களாக முன்வைப்பர்.
- முதிர்ச்சி பெற்ற கிறிஸ்தவராக வாழ்வர்.
- உரிய வயதில் திருமுழுக்குப் பெறுவதற்கு பிறரை ஊக்கப்படுத்துவர்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள்:**

**படிமுறை 1**

- குழந்தைகளுக்குத் திருமுழுக்கு கொடுக்கப்படுகிற படத்தையும் உறுதிப்பூசுதல் வழங்கப்படுபகின்ற படத்தையும் காட்சிப்படுத்தி, கீழ்க் காணப்படும் கருத்துக்கள் வெளிக் கொணரும்படி மாணவரோடு கலந்துரையாடுங்கள்.
  - திருமுழுக்கின் வழியாக சென்மபாவமும் கன்மபாவமும் நீக்கப்பட்டு நாம் இறைவனின் பிள்ளைகளாகவும் திருச்சபையின் அங்கத்தவராகவும் உரிமை பெறுகிறோம்.
  - முன்னேற்றமடைதல், வளர்ச்சியடைதல், முதிர்ச்சியடைதல் என்பன ‘‘உறுதிப்பூசுதல்’’ எனும் சொல்லின் அர்த்தங்களாகும்.
  - திருமுழுக்கின் வழியாக இறைவனின் பிள்ளையாக மீண்டும் பிறக்கிற கிறிஸ்தவர் உறுதிப்பூசுதலின் வழியாக வலிமை பெற்று முதிர்ச்சியடைந்த கிறிஸ்தவர் எனும் நிலையைப் பெறுகின்றனர்.

(15 நிமிடங்கள்)

**படிமுறை 2**

- பொருத்தமான முறையில் மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து, தேவையான தரவிருத்தி உள்ளீடுகளை வழங்கி, குழுச் செயற்பாடுகளில் ஈடுபடுத்தி அவர்களின் செயற்பாடுகளை அவதானித்துத் தேவையான வழிகாட்டல்களை வழங்குங்கள்.

(30 நிமிடங்கள்)

**படிமுறை 3**

- ஒவ்வொரு குழுவினருக்கும் செயற்பாடுகளை முன்வைப்பதற்கான சந்தர்ப்பத்தை வழங்கி பின்வரும் கருத்துக்களின் அடிப்டையில் பாடத்தைச் சுருக்கமாக விளக்குங்கள்.
  - திருமுழுக்கு
    - திருமுழுக்கின் அவசியம் (யோவான் 3:5)
    - இயேசுவின் இறுதிக் கட்டளை (மத்தேயு 28: 19-20)
    - திருமுழுக்கினால் கிடைக்கும் அருள் வரங்கள்.
      - இறைவனின் பிள்ளையாகுதல்.
      - திருச்சபையின் அங்கத்தவராகுதல்.
      - சென்ம பாவம் நீங்குதல்.
      - எல்லா கன்மபாவங்களுக்கும் மன்னிப்பு கிடைத்தல்.
      - ஏனைய அருளடையாளங்களைப் பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்புக் கிடைத்தல்.
      - தூய ஆவியின் ஆலயமாதல்.

- ஞானப் பெற்றோராக இருப்பதற்குரிய தகுதிகள்
    - புகுமுக அருளடையாளங்களைப் பெற்றிருத்தல்.
    - 16 வயது நிறைவடைந்திருத்தல்.
    - திருச்சபையினால் விதிக்கப்படும் எவ்வித தண்டனைக்கும் உள்ளாகாமலிருத்தல்.
    - தமது நம்பிக்கையை வாழ்பவராகவும், தமது கடமைகளை விளங்கிக் கொண்டவராகவும் இருத்தல்.
- திருமுழுக்கு கொடுக்கப்படும் வேளையில் உபயோகிக்கும் அடையாளங்களின் அர்த்தம்.

  (தண்ணீர், வெண்ணிற ஆடை, திருத்தைலம் பூசுதல், பாஸ்கா மெழுகுவர்த்தி)
- திருச்சபையின் சட்டங்கள் 851, 857, 862, 865, 867, 868, 872

- உறுதிப்பூசுதல்
    - மீட்பு வரலாற்றில் உறுதிப்பூசுதல்.
    - பெறுவதற்கான தகுதிகள்.
        - திருமுழுக்குப் பெற்றிருத்தல் வேண்டும்.
        - 14 வயது நிறைவடைந்திருத்தல் வேண்டும்.
        - இறையருளில் வாழ்தல் (ஒப்புரவு அருளடையாளத்தினைப் பெறுவது உறுதிப்பூசுதல் பெறுவதற்கான தகுதி)
    - கிடைக்கப்பெறும் அருள்வரங்கள் (க.தி.ம 1302 - 1305)
    - பெறுவதற்கு தகுதியானவர்கள் (க.தி.ம 1306 - 1311)
    - வழங்குபவர் (க.தி.ம 1312 - 1314 )

(35 நிமிடங்கள்)

**தரவிருத்தி உள்ளீடுகள்** :

- திருவிவிலியம்
- குழந்தைக்கு திருமுழுக்குக் கொடுக்கப்படும் விதம் பற்றிய படம்
- உறுதிப்பூசுதல் வழங்கப்படும் விதம் பற்றிய படம்
- இணைப்பு 1

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள் :**

தேர்ச்சி மட்டத்திற்கேற்ப கற்றற் பேறுகள் எய்தப் பெற்ற அளவினை கணிப்பிடக் கூடிய வகையில் நியதிகளைத் தயாரிக்கும் சுதந்திரம் ஆசிரியருக்குள்ளது.

## இணைப்பு 1

- பாடநூலின் 12ஆம் பாடத்தை வாசியுங்கள்.
- உங்களுக்குக் கிடைத்துள்ள தலைப்புத் தொடர்பான ஆக்கத்தினை முன்வைப்பதற்கு ஆயத்தமாகங்கள்.
    - குழு 1 : திருமுழுக்கு
    - குழு 2 : உறுதிப்பூசுதல்

**வீட்டுச் சூழல்**

- முதிர்ச்சி பெற்ற கிறிஸ்தவராக பொறுப்புகளை ஏற்றுக்கொள்வதற்கு பிள்ளைகளைப் பழக்குங்க்ள.

**தேர்ச்சி 3:0** : அருளடையாளங்கள் வழியாக கிறிஸ்துவுடன் இணைந்து பெற்றுக் கொண்ட புதுவாழ்வுக்குச் சான்று பகர்வர்.

**தேர்ச்சி மட்டம் 3.2** : குணமளிக்கும் அருளடையாளங்களின் அருள்வளங்களால் ஆன்ம உடல் நலம் பெறுவர்.

**பாடவேளை** : 02

**கற்றற் பேறுகள்** :

- குணமளிக்கும் இரு அருளடையாளங்கள் தொடர்பான தகவல்களைத் திரட்டுவர்.
- தேவையான சந்தர்ப்பங்களில் குணமளிக்கும் அருளடையாளங்களைப் பெற வேண்டுமென்பதை ஏற்றுக்கொள்வர்.
- திரட்டிய தகவல்களை ஆக்கங்களாக முன்வைப்பர்.
- உண்மையான மனம் வருந்தலின் மூலம் மன மாற்றத்தினை ஏற்படுத்திக் கொள்வர்.
- நோயாளரைத் தரிசித்து அவர்களுக்காகச் செபிப்பர்.

